2023

කාර්යසාධන වාර්තාව

செயலாற்றுகை அறிக்கை

PERFORMANCE REPORT



ශ්‍රී ලංකා සුරාබදු දෙපාර්තමේන්තුව

இலங்கை மதுவரித் திணைக்களம்

EXCISE DEPARTMENT OF SRI LANKA

මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය

நிதி,பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION & NATIONAL POLICIES



செயலாற்றுகை அறிக்கை

2023

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி, பொருளாதார, கொள்கை அபிவிருத்தி அமைச்சின் அரச நிதித் திணைக்களத்தின் ஊடாக அனுப்பப்பட்ட PFD /RED /COPA /2019 /01 ஆம் இலக்க, 2020.01.30 ஆம் திகதிய வழிகாட்டல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டது.

2023 இற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

நிறுவனத்தின் பெயர்	-	இலங்கை மதுவரித் திணைக்களம்
நிறுவனத்தின் முகவரி	-	இல. 353, கோட்டை வீதி, ராஜகிரிய
செலவுத் தலைப்பு இல.	-	248 - மதுவரித் திணைக்களம்
மின்னஞ்சல்	-	excisen@sltnet.lk
இணையம்	-	*www*.excise.gov.lk
தொலைபேசி இல.	-	0112-045000
தொலைநகல்	-	0112-877890
24 மணிநேர அழைப்பு	-	1913

உள்ளடக்கம்

பக்க இல.

அத்தியாயம் - 01 நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1	அறிமுகம்	69
1.2	இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள், பிரதான பணிகள் மற்றும் பெறுமானங்கள்	70
1.3	இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு	73
1.4	இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் அமைவிட வரைபடம்	74

அத்தியாயம் - 02 முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1	சிறப்பு அடைவுகள்	77
2.2	எதிர்கால இலக்குகள் மற்றும் சவால்கள்	81
2.3	நலன்புரி	84

அத்தியாயம் - 03 வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1	நிதிச் செயலாற்றுகைக் கூற்று	87
3.2	நிதி நிலைமை பற்றிய கூற்று	89
3.3	நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று	90
3.4	நிதிச் செயலாற்றுகைக் கூற்று - மதுவரி வெகுமதி நிதியம்	92
3.5	நிதி நிலைமை பற்றிய கூற்று - மதுவரி வெகுமதி நிதியம்	93
3.6	நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று - மதுவரி வெகுமதி நிதியம்	94
3.7	நிதிக் கூற்றுக் குறிப்புகள்	95
3.8	ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை	95
3.9	நி.ஒ.208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுகள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு	95
3.10	நிதியல்லாச் சொத்துகளை அறிக்கையிடலின் செயலாற்றுகை	95
3.11	கணக்காய்வாளர் நாயகத்தின் பொழிப்பு அறிக்கை - இலங்கை மதுவரித் திணைக்களம் - (சிங்கள மொழிப் பதிப்பு) - இணைப்பு 1	
3.12	கணக்காய்வாளர் நாயகத்தின் பொழிப்பு அறிக்கை - மதுவரி வெகுமதி நிதியம் - (சிங்கள மொழிப் பதிப்பு) - இணைப்பு 2	

அத்தியாயம் - 04 செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1	அறிமுகம்	99
4.2	நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்	101

அத்தியாயம் - 05 நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை(SDG) இனங்காணும் செயலாற்றுகை

5.1	அறிமுகம்	105
5.2	நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம்	106

அத்தியாயம் - 06 மனிதவள விபரம்

6.1	பதவியணி முகாமைத்துவம்	113
6.2	நிறுவனத்தின் நிறைவேற்றுகையை மனிதவளத்தில் ஏற்படும் குறை அல்லது மிகை பாதிக்கும் முறை	113
6.3	வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள்	115
6.4	மனித வள அபிவிருத்தி	117

அத்தியாயம் - 07 இணக்கப்பாட்டு அறிக்கை

7.1	நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பங்களிக்கும் முறை பற்றிய இணக்கப்பாட்டு அறிக்கை	123

அத்தியாயம் - 01

நிறுவனத்தின் விபரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

1.2 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள், பிரதான பணிகள் மற்றும் பெறுமானங்கள்

1.3 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு

1.4 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் அமைவிட வரைபடம்

1.1. அறிமுகம்

இலங்கை மதுவரித் திணைக்களமானது, ஏறத்தாள நூற்றி பதினொரு வருட வரலாற்றைக் கொண்ட இலங்கையின் அரச வருமானம் சேகரிக்கும் முதன்மை நிறுவனம் ஒன்றாகும். மதுவரி, புகையிலை வரி மற்றும் பீடி புகையிலை வரி வருமான முகாமைத்துவம், அதற்கான சட்ட வலுப்படுத்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு முப்பரிமாணப் பணிக்கூற்றுகளை நிறைவேற்றுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திணைக்களத்தால் 1912 ஆம் ஆண்டிலிருந்து நூற்றுப் பதினொரு வருட காலத்தினுள் பல விசேட சம்பவங்கள் இங்கு அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், மீளாய்வு வருடமான 2023 ஆம் ஆண்டானது இத்திணைக்களத்திற்கு ஒரு சவால்மிக்க வருடமாக இருந்தது.

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரி ஆணையாளர் நாயகமாக இலங்கைப் பாராளுமன்றத்தின் அமைச்சரவைத் தீர்மானத்தின் பேரில் நான் 2024.01.11 ஆம் திகதி நியமிக்கப்பட்டேன். மீளாய்வு ஆண்டான 2023 இல் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் நிர்வாக மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளின் பொருட்டு மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம், பதில் மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம், ஒரு பிரதான நிதி அலுவலர், ஒரு மதுவரி ஆணையாளர் மற்றும் பதில் மதுவரி ஆணையாளர், பிரதம கணக்காளர் மற்றும் இரண்டு கணக்காளர்கள், நான்கு பதில் பிரதி மதுவரி ஆணையாளர்கள், ஒரு சட்ட அலுவலர், உதவிப் பணிப்பாளர் மற்றும் இரண்டு நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் சேவை புரிந்தனர். மேலும், மதுவரித் தலைமை அலுவலகத்தில் உள்ளக நிர்வாகத்தினை முறைப்படி மேற்கொள்ளும் பொருட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கணக்காய்வுப் பிரிவு ஒன்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்றும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்ட புள்ளிவிபரவியலாளர் ஒருவரைக் கொண்ட புள்ளிவிபரப் பிரிவு ஒன்றும் செயற்படுகின்றது.

திணைக்களமானது சகல மாகாணங்களையும் உள்ளடக்கியவாறு 13 உதவி மதுவரி ஆணையாளர் அலுவலகங்கள், 30 மதுவரி அத்தியட்சகர் அலுவலகங்கள், 56 மதுவரி நிலையங்கள், 05 மதுவரி விசேட நடவடிக்கைப் பிரிவுகள், ஒரு போதைப்பொருள் தடுப்புப் பிரிவு என்பன அடங்கலாக வினைத்திறன் மிக்க விசாலமான நிறுவகமாக நாடளாவிய சேவையை வழங்குகிறது. அத்துடன் மதுபான, சிகரட் உற்பத்தி தொடர்பான உற்பத்திச்சாலைகளில் உஅமைந்துள்ள மதுவரிப் பிரிவுகளிலும் நிரந்தரப் பணியாளர் குழாத்தினர் இணைக்கப்பட்டுள்ளனர்.

2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை மதுவரி திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட வருமான இலக்கு 217 பில்லியன் ரூபாயாகும். இந்த மொத்த வருமானத்தை சேகரிக்க மதுபான வரி வருமானத்தின் மூலம் 214 பில்லியன் ரூபாவும், புகையிலை வரி வருமானத்தின் மூலம் 3 பில்லியன் ரூபாவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்பட்ட 2022.12.31 ஆம் திகதிய பீடி புகையிலை வரி ஊடாக 2023 ஆம் ஆண்டில் இந்த 3 பில்லியன் ரூபாவை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடுமையான பணவீக்கத்தால் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட 217 பில்லியன் மதுவரி வருமான இலக்கை அடைவதில் சிரமம் காணப்பட்டமையால், நிதி அமைச்சானது 2023ஆம் ஆண்டிற்கான மதுவரி வருமான இலக்கினை 182 பில்லியன் ரூபாயாக திருத்தஞ்செய்தது. வருமான இலக்குகளை திருத்தியமைத்ததை தொடர்ந்து , 181 பில்லியன் ரூபாய் மதுபான வரி வருமானமாகவும், 1 பில்லியன் ரூபா புகையிலை வரி வருமானமாகவும், வருமான இலக்கு வழங்கப்பட்டது.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும், திணைக்களத்தால் மதுபான வரி வருமானமாக 177.57 பில்லியன் ரூபாயையும் புகையிலை வரி வருமானமாக 1 பில்லியன் ரூபாயையும் சேகரிக்க முடிந்தது, மேலும் வரி விலக்குடன் (7.3 பில்லியன் ரூபா) திணைக்களத்தால் மொத்த மதுவரி வருமானமாக 178.57 பில்லியன் ரூபாயினை சேகரிக்க முடிந்தது. 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியின் தாக்கம் மற்றும் பணியாளர் பற்றாக்குறை என்பன காரணமாக ஆகியவை 2023 இல் ஒட்டுமொத்த செயலாற்றுகையில் தாக்கங்களை ஏற்படுத்திய போதிலும், சேகரிக்கப்பட்ட 98.1% வருமானம் முன்னேற்றத்தைக் காட்டியது.

2023 ஆம் ஆண்டில் மதுவரி அலுவலர்களினால் நாடு முழுவதும் 39.436 சட்டவிரோத மதுபானம் மற்றும் போதைப்பொருள் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் மூலம் பெறப்பட்ட தண்டப்பணம் ரூ168,292,485ஆகும். மதுவரி உரிமம் பெற்ற நிலையங்களில் 5,499 உரிம நிபந்தனை மீறல்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அறவிடப்பட்ட கூட்டுத் தண்டப்பணம் ரூ172,209,513 ஆகும்.

மீளாய்வு வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று திணைக்களத்தின் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 1,288 ஆகும். வெற்றிடங்களின் எண்ணிக்கை 411 ஆக உள்ளதுடன் இது அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கையின் 25% ஆகும். இத்தகைய பணியாளர்களின் பற்றாக்குறையில் கூட, எதிர்பார்த்த செயலாற்றுகையின் 98% வரை அடைய முடிந்தது.

2023 ஆம் ஆண்டில் வெற்றிடமாக இருந்த சட்ட அலுவலர் மற்றும் உதவி இயக்குநர் (த.தொ) பதவிகளுக்கு இரண்டு புதிய அலுவலர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். மேலும், சிரேஷ்ட மட்ட பதவி உயர்வுகளாக பிரதி மதுவரி ஆணையாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டதுடன், மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 08 மதுவரி ஆணையாளர் பதவிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான ஆரம்ப கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், மூன்றாம் நிலை மட்டங்களிலுள்ள 21 பிரதான மதுவரி பரிசோதகர் பதவிகளுக்கு இந்த ஆண்டில் பதவி உயர்வு வழங்கப்பட்டதுடன், 56 மதுவரி பரிசோதகர் பதவிகளுக்கும், 170 இரண்டாம் நிலை பதவிகளுக்கும் அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான ஆரம்ப கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த சகல கடமைகளையும் நிறைவேற்றும் போது, நிதி அமைச்சு மற்றும் திறைசேரியுடன் தொடர்புடைய சகல அலுவலர்கள் மற்றும் இலங்கை பொலிஸ், இலங்கை சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுற்றுலா ஊக்குவிப்பு அதிகார சபை, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம், இலங்கை கட்டளைகள் நிறுவகம், புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்கள் இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு வழங்கிய ஒத்துழைப்பிற்காக நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

2023 ஆம் ஆண்டில் முழு அரச சேவையிலும் நிலவிய பொருளாதார நெருக்கடி மற்றும் உயர் பணவீக்கம் என்பன ஏற்படுத்திய தாக்கம் காரணமாக இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகைக்கும் ஓரளவு இடையூறு ஏற்பட்ட போதிலும், அவ்வருடத்திற்குரிய நிறுவனம் சார் நிறைவேற்றுகை மட்டத்தை உயர் சதவீதத்துடன் பேணும் பொருட்டு வழங்கிய ஒத்துழைப்பிற்காக இலங்கை மதுவரி திணைக்களத்தின் சகல மதுவரி அலுவலர்களுக்கும் இணைந்த மற்றும் நாடளாவிய சேவை அலுவலர்கள் அடங்கலாக சகல மதுவரி அலுவலர்களிற்கும் எனது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்.ஜே.குணசிறி
மதுவரி ஆணையாளர் நாயகம்

1.2 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள், பிரதான பணிகள் மற்றும் பெறுமானங்கள்

ශ්‍රී ලංකා සුරාබදු දෙපාර්තමේන්තුව
Excise Department of Sri Lanka

" වගකීමෙන් සුරක්ෂාවට "
"பொறுப்பினூடான பாதுகாப்பு"
"Protection through responsibility"

தூர நோக்கு

மதுபான, புகையிலைக் கைத்தொழிலை முறைப்படி ஒழுங்குபடுத்தலின் ஊடாக அரசிறை வருமான மேம்பாட்டின் பொருட்டு மிகவும் கௌரவமான, பொறுப்புவாய்ந்த அரச நிறுவனமாகத் திகழுதல்.

பணிக்கூற்று

சட்டரீதியான விற்பனை வருமானத்தை உருவாக்கும் பொருட்டு வசதிகளைத் திட்டமிடலின் ஊடாகவும், அமுல்படுத்த இயலுமான சகல சட்ட, ஒழுங்குவிதிகளிற்கு இசைவாக செயல்வலுப்படுத்தலின் ஊடாகவும், சட்ட விரோத மதுபானம், அபாயகரமான அவுடதங்கள் மற்றும் மனநிலை தடுமாற்றப் பதார்த்தங்களின் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்படுத்துவதன் ஊடாகவும், தரமற்ற அற்ககோல் பாவனையினால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளிலிருந்து பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டும், பொருளாதார வளர்ச்சிக்கும் விருத்திக்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்காக, நாட்டினுள் மதுபானங்கள் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட அற்ககோல்களை வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதி மிக்கதாகவும் நிர்வகித்தல்.

குறிக்கோள்கள்

- உபாயத்திறன், செயற்பாட்டு மற்றும் மூலோபாய மட்டங்களில் பயன்மிக்க தீர்மானங்களை எடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு நிறுவனம்சார் நோக்கில் இணக்க மேம்பாடு மற்றும் இடர் முகாமைத்துவத்தின் ஊடாக வருமானம் சேகரித்தலை உயர்வுபடுத்துதல்.

- வருமானத்தை உயர்த்தும் நோக்கில் அறிவை தொடர்ச்சியாக பரிமாற்றம் செய்தலின் ஊடாக உரிய சட்டங்களுடன் பங்குதாரர்களின் இசைவை உயர்த்தலின் மூலம் விற்பனைக்கு வசதியளித்தல்.

- மதுபான, புகையிலை வருமானத்தை நிர்வகித்தல் மற்றும் வசதியளித்தல் இடையே சமநிலையைப் பேணும் பொருட்டு அடிப்படையான இடர் முகாமைத்துவக் கோட்பாடுகளில் வினைத்திறன் மிக்க பிரயோகத்தை மேற்கொள்ளல்.

- மதுவரி சேகரித்தலில் நேர்மையையும் வினைத்திறனையும் பிரயோகித்து பொது மக்களின் நம்பிக்கையைப் பேணுதல்.

- மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை, தூய்தாக்கப்பட்ட மதுசாரம், தன்மை மாற்றப்படாத மதுசாரம் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட போதைப்பொருட்களை ஒழுங்கு படுத்தல்.

- சட்ட விரோத மதுபானம் மற்றும் போதைப் பொருட் பாவனைக்கு எதிராக தொடர்ச்சியாக நடவடிக்கைகளை அமுல்படுத்தலும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதலும்.

- சட்ட விரோதமாக மதுசாரம் வடித்தல் மற்றும் இரகசியமாக உரிமம் இன்றி மதுசாரம் வடித்தல் என்பவற்றிற்கு எதிராக சட்ட ஒழுங்கு விதிகளை செயல்வலுப்படுத்தல்.

- தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அபிவிருத்தி ஊடாக போதியளவு தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் இருத்தலை உறுதிப்படுத்துவதற்காக பணியாளர்களின் இயலுமையை விருத்தி செய்தலும் கொள்ளளவைக் கட்டி எழுப்பலும்.

- அதியுயர் திருப்தி மற்றும் முறையான பயிற்சியுடனான அர்ப்பணிப்பு மிக்க அலுவலர்களைப் பேணுதல்.

- மதுபான, போதைப்பொருட் பாவனையைத் தடுத்தல் மற்றும் போதைப்பொருள், மனோவசியப் போதைப்பொருட்களை சட்ட விரோதமாக ஏற்றி இறக்கலை தடுத்தல்.

- நச்சு போதைப்பொருள் மற்றும் நச்சு மதுபான விற்பனையை ஒழித்தலும் அவற்றைப் பாவித்தலில் இருந்து பொது மக்களைப் பாதுகாத்தலும்.

- நிதி அமைச்சு மற்றும் ஏனைய வெளியக நிறுவனங்களுடன் நல்லுறவைப் பேணுதல் மற்றும் வினைத்திறன் மிக்க வரி முறைமையைப் பேணுதல்.

பணிகள் மற்றும் பெறுமானங்கள்

பணிகள்

- மதுவரி உரிமம் பெற்ற சகல நிலையங்களையும் மேற்பார்வையிடுதல், நிர்வகித்தல் மற்றும் அவற்றிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானத்தை சேகரித்தல்.

- மதுவரிக் கட்டளைச் சட்டம், புகையிலை வரிச்சட்டம் என்பவற்றை வினைத்திறன் மற்றும் பயனுறுதி மிக்க முறையில் செயல்வலுப்படுத்தல்.

- நஞ்சுகள், அபின், அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தினை அமுல்படுத்தும் நிறுவனமாக செயலாற்றுதல்.

- நாட்டின் சமூகப் பாதுகாப்பின் பொருட்டு புகையிலை மற்றும் அற்கஹோல் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தினை அமுல்படுத்துதல்.

- இலங்கைப் பொலிஸ், சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் போன்ற ஏனைய சட்ட வலுப்படுத்தும் நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணுதல்.

- சட்ட விரோத மதுபானம், போதைப்பொருட்களிற்கு எதிராக நிறுவன நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக தெளிவுபடுத்தல் மற்றும் சட்ட விரோத மதுபானம், அபாயகர அவுடதங்களின் ஆபத்து பற்றி மாணவர்கள் மற்றும் சமூகத்தை தெளிவுபடுத்தல்.

- 2008 இன் 01 ஆம் இலக்க போதைப்பொருட்கள் மற்றும் மனோவசியப் பொருட்களை சட்ட விரோதமாக ஏற்றி இறக்கலுக்கு எதிராக சமவாயத்தை அமுலாக்குதல்.

- திட்டமிடப்பட்ட வருடத்தினுள் சகல மட்ட பணியாளர்களிற்கும் பயிற்சிகளை வழங்குதல்.

- கூட்டங்கள், கலந்துரையாடல்கள் பொருட்டு சகல தரப்பினருடனும் வினைத்திறன் மிக்க பங்களிப்பை வழங்கல்.

பெறுமானங்கள்

- அனைவரையும் சமமாக நடத்தும் நட்பு மற்றும் வெளிப்படையான தன்மையுடைய சேவையை வழங்கும் கலாச்சாரத்தைப் பேணுதல்.

- இறுதி இலக்கை நோக்கிச் செல்லக்கூடிய, குழு மனப்பான்மையுடன் சேவையாற்றக் கூடிய அலுவலர்களைக் கொண்டிருத்தல்.

- பாதுகாப்பான எதிர்காலத்தின் பொருட்டு எதிர்கால சந்ததியினருக்கு சரியான வழிகாட்டலின் நோக்கில் சட்ட விரோத மதுபான, போதைப்பொருட்களை ஒழித்தற்கு நடவடிக்கை எடுத்தல்.

- மானிடப் பெறுமதியை மதிக்கும் தனிநபர் ஒருவரை சமுகமயமாக்குதல்.

- முறையான உபாயத்திறன் மிக்க திட்டத்தில் நடவடிக்கை எடுத்தல். புதிய தொழில்நுட்ப முறையின் கீழ் பயனாளிகளிற்கு வினைத்திறன் மிக்க, அதியுயர் சேவையை வழங்குதல்.


- நவீன தொழில்நுட்ப முறையின் கீழ் சரியான முறையில் வரி சேகரித்தல்.

- நம்பகரமான தரவுத் தளத்தைப் பேணுதல்.


- நச்சு போதைப்பொருட்கள் மற்றும் நச்சு மதுபானப் பாவனையை இழிவுபடுத்தும் பொருட்டு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.

- வெளியக நிறுவனங்களுடன் நல்ல ஒருங்கிணைப்பைப் பேணுதல்.

1.3 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு



1.4 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் அமைவிடங்கள்



அத்தியாயம் -02

முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1 சிறப்பு அடைவுகள்
- 2.1.1 வருமானம்
- 2.1.2 நிர்வாகம்
- 2.1.3 தகவல் தொழில்நுட்பம்
- 2.1.4 சட்ட வலுப்படுத்தல்
- 2.1.5 ஆதரவளிப்பு
- 2.1.6 கற்கைகளும் ஆராய்ச்சியும்

2.2 எதிர்கால இலக்குகள் மற்றும் சவால்கள்
- 2.2.1 எதிர்கால இலக்குகள்
- 2.2.2 சவால்கள்

2.3 நலன்புரி


2.1 சிறப்பு அடைவுகள்

2: 1: 1 வருமானம்

20223 முழுவதும் இலங்கைக்கு சவால் மிக்கதொரு வருடமாகும். அதற்கான பிரதான காரணங்களாக 2023 இல் நிலவிய உயர் பணவீக்கமும் பொருளாதார சமூக நெருக்கடி காரணமாக மக்களின் வாழ்வில் ஏற்பட்ட பாதிப்புமாகும்.

- இலங்கை மதுவரித் திணைக்களம் 2022 ஆம் வருட ஆரம்பத்தில் நிதி அமைச்சிற்கு சமர்ப்பித்த செயல் திட்டத்தின் பிரகாரம் மதுவரி மற்றும் புகையிலை வரி வருமானமாக ரூபா 217 பில்லியனை சேகரிக்க உடன்பட்டது. எவ்வாறாயினும் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க நாட்டில் ஏற்பட்டுள்ள அதீத பணவீக்க நிலைமை, பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் காரணமாக மதுவரி மற்றும் புகையிலை வரி வருமான இலக்கை 182 பில்லியனாக குறைப்பதற்கு நிதியமைச்சு உடன்பட்டது. வருமான இலக்குகளை திருத்தஞ் செய்த பின்னர், மதுபான வரிக்கு 181 பில்லியனாகவும், புகையிலை வரிக்கு 1 பில்லியனாகவும் வருமான இலக்குகள் புதுப்பிக்கப்பட்டன. அதன்படி, 177.57 பில்லியன் ரூபா மதுபான வரி வருமானமாகவும், 1 பில்லியன் ரூபா புகையிலை வரி வருமானமாகவும் 2023 ஆம் ஆண்டில் வரி விலக்களிப்புடன் மொத்த வருமானமாக 178.57 பில்லியன் ரூபா சேகரிக்கப்பட்டுள்ளது.

- இதன்படி மதுபானம் மற்றும் புகையிலை வரி வருமானம் 98% அதிகரிப்பை அடைந்துள்ளது. 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க 2022.12.31 ஆம் திகதிய பீடி புகையிலை வரி மற்றும் புகையிலை வரி அரசாங்க சட்டத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பீடி புகையிலை வரி மற்றும் புகையிலை வரி என்பவற்றின் மூலம் 1.014 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.
- எனவே, 2022 உடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் புகையிலை வரி வருமானத்தில் அதிக வளர்ச்சியைக் காணமுடிகிறது. 2022 உடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டில் மதுபான உற்பத்தி 19% ஆல் குறைந்துள்ளதுடன் 2023 ஆம் ஆண்டில் மதுபான உற்பத்தியானது சுமார் 8.2 மில்லியனலீற்றர் தூய அற்கஹோல் குறைப்பைக் காட்டியது.
- ஒரு லீற்றர் தூய அற்கஹோலிற்கான மதுவரி இரண்டு முறை அதிகரிக்கப்பட்டது (31.12.2022 திகதியிட்ட மதுவரி அறிவிப்பு 7/2023 மற்றும் 30.06.2023 திகதியிட்ட மதுவரி அறிவிப்பு 2/2023 இன் பிரகாரம்), 2023 ஆம் ஆண்டில் ஒரு மதுபான போத்தலுக்கான விற்பனை விலை சுமார் 26% ஆல் அதிகரித்துள்ளது. பணவீக்கம் காரணமாக மதுபானங்களுக்கான தேவை குறைவடைந்து வருகின்றமை, நுகர்வோரின் ஊக்கமின்மை மற்றும் சட்டவிரோத மதுபானத்தின்பால் திசைதிருப்பப்படுவது ஆகியவை உற்பத்தி வீழ்ச்சிக்கு வழிவகுத்ததுடன் எதிர்பார்த்த வருமானத்தைப் பெற்றுக் கொள்ள இடையூறாக உள்ளது. இத்தகைய தடைகளுக்கு மத்தியில் இவ்வகையான வருமானத்தைச் சேகரித்தமை ஒரு விசேட சாதனையாகும் என்பதுடன், 1912 –2023 காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட உயர் வருமானமாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.



- மேலும் அவ்வாறே மதுபானம், மென் மதுபானம் என்பன ஏற்றுமதி செய்தலின் ஊடாக ரூ.7.3 பில்லியன் மதுவரி மீளச் செலுத்தப்பட்ட பின்னர் ரூ.171.27 பில்லியனை திறைசேரிக்கு அனுப்ப முடிந்தமை விசேடமானதாகும்.

- மதுவரி அறிவித்தல் 04/2019 இன் பிரகாரம் இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு மதுபானங்களுக்கு பாதுகாப்பு ஸ்டிக்கரை ஒட்டுதல் 2019.07.15 முதல் ஆரம்பிக்கப்பட்டதுடன் பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒட்டுதல் சம்பந்தமான சகல விதி முறைகளும் இவ்வறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. 06/2019, 01/2020, 03/2020, 01/2021 களின் ஊடாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும்

மதுபான போத்தல்கள் மீது பாதுகாப்பு ஸ்ரிக்கரை ஒட்டுதலை ஆரம்பிக்கும் திகதி காலத்திற்குக் காலம் திருத்தஞ் செய்யப்பட்டதுடன் மதுவரி அறிவித்தல் 04/2019 நீக்கப்பட்டு மதுவரி அறிவித்தல் 07/2021 வெளியிடப்பட்டது. மதுவரி அறிவித்தல் 07/2021, 08/2021, 09/2021 இன் ஊடாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சகல மதுபானப் போத்தல்கள் மீதும் பாதுகாப்பு ஸ்டிக்கரை ஒட்டுதலை ஆரம்பிக்கும் திகதி காலத்திற்குக் காலம் திருத்தஞ் செய்யப்பட்டதுடன் அவ்வறிவித்தல்கள் நீக்கஞ் செய்யப்பட்டு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபான போத்தல்கள் மீது பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒட்டுதல் மற்றும் டிஜிட்டல் அடையாளத்தைப் பதித்தல் ஆரம்பிக்கும் தினமாக 2022 ஜனவரி 3 என வெளியிட்டு மதுவரி அறிவித்தல் 10/2021 வெளியிடப்பட்டது.தற்போது மதுவரி அறிவித்தல் 07/2021 இன் ஒழுங்குவிதிகளின்படி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களிற்கும் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்களிற்கும் பாதுகாப்பு ஸ்டிக்கர், டிஜிட்டல் அடையாளம் என்பன பொறிக்கப்படுகிறது. போலி பாதுகாப்பு ஸ்டிக்கர்கள் ஒட்டுவது தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் சுற்றிவளைப்புக்கள் நடத்தப்பட்டு, இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- அரச வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் 2022 இன் வரவுசெலவுத் திட்ட யோசனை ஊடாக பீடி உற்பத்தியில் பீடிக்கான பீடிப் புகையிலை வரி விதிக்கப்பட்டது. திணைக்கள வருமானத்தை அதிகரிக்க முடிந்தமை பெற்றுக்கொண்ட சிறப்பு அடைவாகும். இந்த வரி சேகரித்தலுக்குத் தேவையான சட்டப் பின்னணி 2022.12.31 ஆம் திகதிய 1999 இன் 08 ஆம் இலக்க புகையிலை சட்டத்தின் கீழான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக வெளியிடப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் பீடி புகையிலை வரியாக 934.3 மில்லியன் ரூபாவை அரச வருமானத்தில் வரவு வைக்க முடிந்தமை ஒரு சிறப்பு அடைவாகும்
- இலங்கை முழுவதும் சட்ட விரோத மதுபானம், சிகரட் மற்றும் போதைப்பொருட்கள் பற்றிய 39,436 சுற்றிவளைப்புகள் மேற்கொள்வதற்கு சட்ட வலுப்படுத்தல் பிரிவினால் முடிந்தது. அச்சுற்றிவளைப்புகளிற்கு அமைய தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளிற்காக ரூ.168,292,485.00 தண்டப்பணம் கிடைக்கப் பெற்றது. மேலும் உரிம நிபந்தனைகளை மீறியமைக்கு எதிராக 5,499 தொழில்நுட்பக் குற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு ரூ.172,209,513.00 கூட்டுத் தண்டப்பணத்தை அரசிற்கு பெற்றுக்கொடுக்க முடிந்தமை சிறப்பான அடைவாகும்.

2 : 1 : 2 நிர்வாகம்

- நிர்வாகப் பிரிவினால் சிரேஷ்ட மட்ட பதவி உயர்வுகளாக 02 பிரதி மதுவரி ஆணையாளர் பதவிகளுக்கு 2023.08.15 ஆம் திகதி குறித்த நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு 2023 ஆம் ஆண்டில் அங்கீகாரத்திற்காக பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

- மூன்றாம் நிலை பதவி உயர்வுகளாக 21 பிரதான மதுவரி பரிசோதகர் பதவிகளுக்கு 25.02.2023 அன்று பதவி உயர்வு வழங்கப்பட்டது. மேலும், 08 மதுவரி ஆணையாளர் பதவிகளை மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையிலும், 56 மதுவரி பரிசோதகர் பதவிகளை மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த அடிப்படையிலும் மூன்றாம் நிலை பதவிகளை நிரப்புவதன் கீழ் ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் இதன்போது மேற்கொள்ளப்பட்டன.

- மேலும், 708 சீருடைப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வும், 135 சிவில் பணியாளர்களுக்கு சம்பள உயர்வும் வழங்கப்பட்டுள்ளன. அக்ரஹார காப்புறுதி கடன் திட்டத்தின் கீழ் 234 விண்ணப்பங்களுக்கு நன்மைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், சீருடை உத்தியோகத்தர்களில் 32 அதிகாரிகளும் சிவில் பதவி நிலை உத்தியோகத்தர்களில் 07 பேரும் ஓய்வு பெற்றுள்ளதுடன், அது தொடர்பான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

- மேலும், இத்திணைக்கனத்திற்கு சொந்தமான சுற்றுலா மாளிகைகளுக்கு இந்த வருடத்தில் 196 முன்பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. சீருடை ஊழியர்களுக்கு 202 கடமை உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளும், சிவில் ஊழியர்களுக்கு 46 கடமை அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வருடத்தில் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் 65 உத்தியோகத்தர்களுக்கு சீருடை கொடுப்பனவுகள்

வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2023 ஆம் ஆண்டில் அதிகாரிகளின் 248 அனர்த்த கடன் விண்ணப்பங்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 345 பண்டிகை முற்பண விண்ணப்பங்களுக்கு பணம் வழங்ககுவதற்குத் தேவையான ஒழுங்குகளை இப்பிரிவு மேற்கொண்டுள்ளது.

- தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற 32 தகவல் கோரிக்கைகளுக்கு உரிய பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வருடத்தில் திணைக்களத்தில் சேவையில் இருக்கும் போது மரணமடைந்த 09 உத்தியோகத்தர்கள் தொடர்பில் மரணப் பணிக்கொடை செலுத்துவதற்குத் தேவையான தகவல்கள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், அவர்களில் மூவருக்கு மரணப் பணிக்கொடை வழங்கப்பட்டது. திணைக்களத்துடன் இணைக்கப்பட்ட 1,228 உத்தியோகத்தர்களின் விடுமுறைகள் தொடர்பான சகல நடவடிக்கைகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. திணைக்களம் தினமும் 80 க்கும் மேற்பட்ட கடிதங்களை அனுப்புகிறது, மேலும் 2023 ஆம் ஆண்டைக் கருத்தில் கொள்ளும்போது, அது ஏறத்தாழ 20,000 ஆகும். இப்பணிகளுக்கு மேலதிகமாக சீருடை பணியாட்டொகுதியினரின் வருடாந்த மற்றும் வருடாந்த அல்லாத இடமாற்றங்கள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு புகையிரத அனுமதிப்பத்திரங்களை வழங்கல் தொடர்பான சகல பணிகளும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

2 : 1 : 3 தகவல் தொழில்நுட்பம்

- இலங்கை சுங்கத் திணைக்களத்தின் *ASYCUDA* முறை ஊடாக மதுவரி சார்ந்த ஏற்றுமதி, இறக்குமதிப் பணிகளிற்கு தேவையான பரிந்துரைகள் மற்றும் அங்கீகாரங்களை இணைய (Online) முறைமையூடாக வழங்குதல். மற்றும் உரிய அலுவலர்களுக்கு இயைபுடைய பயிற்சி, தகவல் தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல்.

- பொதுக் கணக்குகள் பற்றிய குழுவின் கட்டளையை செயற்படுத்தலின் கீழ் திணைக்களத்திற்கான தேவைகள் பற்றிய அட்டவணையின (*SOR*) இரண்டாவது வரைவு தயாரிக்கப்பட்டதுடன் வழிவகைகள் பற்றிய குழுவினால் மேற்பார்வை செய்யப்பட்டது. முன்மொழியப்பட்ட முறைமையினூடாக பரிமாறிக் கொள்ளப்பட வேண்டிய தரவுகள் மற்றும் பரிமாற்றம் செய்யப்படவுள்ள தரவுகள் தொடர்பான அரசாங்க நிறுவனங்கள் இனங்காணப்பட்டன. இக்கருத்திட்டம் உரிய வழிகாட்டலுடன் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளதால் நிபுணத்துவ ஆலோசனை சேவையொன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு மொறட்டுவைப் பல்கலைக்கழகத்திடமிருந்து நிதி முன்மொழிவொன்று பெறப்பட்டது. அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அமைச்சரவை பத்திரத்தின் வரைபு நிதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2:1:4 சட்ட வலுப்படுத்தல் (குற்றம்)



- நாடு முழுவதும் உள்ள மதுவரி உரிம நிலையங்களில் மேற்கொள்ளப்படும் முழுமையான மேற்பார்வை மற்றும் நிர்வாகத்தின் ஊடாக உரிம நிபந்தனைகளை மீறுதல் தொடர்பான 5,499 தொழில் நுட்பக் குற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் மூலம் அரசிற்கு கூட்டுத்தண்டப்பணம் ரூ.172,209,513.00 இனைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை.

- 39,436 சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் போதைப்பொருள் சுற்றிவளைப்புகளின் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அதன் ஊடாக ரூபா 168,292,485.00 ஐ தண்டப்பணமாக பெற முடிந்தமை.

- பொது மக்களுடன் நெருக்கமாக பணியாற்றும் பொருட்டு பொது சன முறைப்பாடுகளிற்கு முக்கியத்துவம் வழங்கலின் பொருட்டு விசேட தொலைபேசி இல. 1913 இனை 24 மணி நேரமும் செயற்படுத்துவதன் ஊடாக 905 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதுடன்,

அம்முறைப்பாடுகள் மதுவரிப் பிராந்திய அலுவலகங்களிற்கு உடனடியாக அனுப்பப்பட்டன.

- சட்ட வலுப்படுத்தல் பிரிவின் மேம்பாடு, அலுவலர்களின் பாதுகாப்பிற்காக 9 மி.மி. வகையில் 140 பிஸ்ரல்களைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கைக் கடற்படை, பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் 2023 இல் மதுவரித் திணைக்களத்திற்காக 118 துப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டன. இதன் ஊடாக சட்ட அமுலாக்கல் அலுவலர்களுக்கு சுய பாதுகாப்பையும் களத்தில் உயர் மட்டத்திலான சுற்றிவளைப்பையும் மேற்கொள்ள சந்தர்ப்பமளிக்கும்.

2:1:5 ஆதரவளிப்பு

- இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிரதான நோக்கமான, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சகல மதுபானங்கள், இறக்குமதி செய்யப்படும் மதுபானங்கள், அற்ககோல் வடிக்கும் மூலப்பொருட்கள் என்பவற்றை உரிய தரத்தில் இருக்குமாறு பேணுவதற்கும் தரமான உற்பத்திகளை சந்தைக்கு அனுப்புவதற்கும் மத்திய இரசாயனப் பகுப்பாய்வுகூடம் ஒன்றை நிறுவுதல் மிகவும் அவசியமானதாக காணப்பட்டது. அதற்கிணங்க, திணைக்களத்திற்குரிய பூகொடை மதுவரி நிலையத்தில் பேணப்படும் நவீன கட்டடம் ஒன்றில் இந்த மத்திய இரசாயன பகுப்பாய்வுகூடத்தை தாபிப்பதற்கான நடவடிக்கைகள் 2021 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் எஞ்சிய வேலைகளை மேற்கொள்வதற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு 2023 இன் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில், இந்த கட்டிடத்தின் அடிப்படை கட்டுமானப் பணிகள் மற்றும் உள்ளக பிரிவிடல்கள் நிறைவடைந்துள்ளன. இந்த மத்திய ஆய்வுகூடத்தின் செயற்பாடுகளை 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- 2023.12.31 ஆம் திகதியளவில் மதுவரித் திணைக்களத்திற்குச் சொந்தமான இலவசக் காணிகளின் எண்ணிக்கை 28 ஆக இருந்ததுடன் 17 காணிகளின் உரித்து கையகப்படுத்தப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் தற்போது 2023 இல் 4 காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

2:1:6 கற்கை மற்றும் ஆராய்ச்சி

- இலங்கையில் கள்ளிற்கு உரிய தரநிலை தயாரித்திருக்காமையால் செயற்கைக் கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்துதல் சிரமமாக இருந்தது. அதற்கிணங்க, இலங்கை மதுவரித் திணைக்களத்தின் கற்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, இலங்கைத் தரநிர்ணய நிறுவகம் மற்றும் அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் அலுவலகத்துடனும் வெளியே கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்துடனும் இணைந்து தென்னம், பனம் மற்றும் கித்துள் கள்ளிற்கு தரநிர்ணயம் வகுப்பதற்கு தேவையான ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

- இந்த ஆராய்ச்சிக்காக நாடளாவிய ரீதியில் களுத்துறை, அநுராதபுரம், சிலாபம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய 4 பிரதேசங்களிலிருந்து கள்ளின் மாதிரிகளை எடுக்க தீர்மானிக்கப்பட்டது. கடந்த வருடத்தில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக நெருக்கடி காரணமாக பணிகளில் சில தடைகள் காணப்பட்ட போதிலும், 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் களுத்துறை, அனுராதபுரம் மற்றும் சிலாபம் ஆகிய மூன்று பிரதேசங்களில் இருந்து கள்ளின் மாதிரிகள் எடுக்கப்பட்டு இலங்கை தரப்படுத்தல் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அந்த மாதிரிகளின் முடிவுகள் பெறப்பட்டன. அம்பாந்தோட்டை பிரதேசத்திலிருந்து எடுத்துச் செல்லப்படவுள்ள கள்ளின் பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேலே குறிப்பிட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி 2024 ஆம் ஆண்டில் கள்ளுக்கான தரங்களை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டில், கள்ளுக்கான தரங்களை நிறுவுவதற்கான திறன் உள்ளது.

- மேலும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சாராயம், பியர் பொருட்டும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெளிநாட்டு மதுபானம் பொருட்டும் தரநிர்ணயமானது, தயாரிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது. மேலும் அது குறித்து உற்பத்தி நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இந்த மதுசாரங்களால் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தரங்களை கண்காணிப்பது மதுவரி திணைக்களத்தின் பொறுப்பாகும். மேலும், பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள்

பற்றிய குழுவினால் வலியுறுத்தப்பட்டுள்ளவாறு இந்த மதுசாரங்களால் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களுக்கான தரங்களை வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடுவது அவசியமானதாகும். 2023 ஆம் ஆண்டில், வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கான வரைவுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோன்று மக்களின் நல்வாழ்விற்கும் இது உதவியாக இருக்கும். வைன் மற்றும் சக்கே பொருட்டும் தரங்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. செறிவு கூடிய மதுபானங்களான பியர் மற்றும் சக்கேயை போத்தலில் அடைக்கும் 26 உற்பத்திச்சாலைகள், 14 வடிசாலைகள் மற்றும் 15 குதங்கள் என்பன இத்திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் காணப்படுகிறது. 56 பிராந்திய மதுவரி அலுவலகங்களின் ஊடாக உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களை சந்தைக்கு வெளியிட்ட பின்னர் அதன் தரம் பற்றிய மேற்பார்வை நடவடிக்கைகள் இடம்பெறும். ஒவ்வொரு நிலையத்திற்கும் ஆகக்குறைந்தது ஒரு ஹைட்ரோமீட்டர் கருவியாவது வழங்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் நாடு முழுவதும் உள்ள சகல மதுபான உற்பத்திச்சாலைகளிற்கும் தேவையான செறிவை அளக்கும் 125 (*Hydrometers*) உபகரணங்களைக் கொள்வனவு செய்ய ரூ. 29.7 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் தற்போது கொள்வனவிற்கான பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடிந்தமை சிறப்பம்சமாகும்.

2:2 எதிர்கால இலக்குகள் மற்றும் சவால்கள்

2:2:1 எதிர்கால இலக்குகள்

- 2023 இல் நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட மதுபானம் மற்றும் புகையிலை பொருட்டான திருத்தஞ் செய்யப்பட்ட இலக்கிற்குரிய வரி வருமானம் ரூபா 182 பில்லியன் என்பதுடன் 2024 ஆம் வருடத்திற்கான வருமான இலக்காக ரூபா 232 பில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

- 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வருமான இலக்கு ரூ .232 பில்லியனாகும், இது 2023 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வருமான இலக்குடன் ஒப்பிடும்போது 27% அதிகமானதாகும். பீடி உற்பத்திக்கு விதிக்கப்பட்ட புதிய வரிக் கொள்கையின் பிரகாரம், 2024 ஆம் ஆண்டில் பீடிக்கு 2 பில்லியன் ரூபாவும் மற்றும் மதுபானத்திற்கான வரி வருமானமாக 230 பில்லியன் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது. மதுபான தொழிற்துறையின் தற்போதைய நிலைமைக்கு அமைய, வருமான அதிகரிப்புக்காக பின்வரும் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் உரிய வருமான இலக்குகளை அடைவது 2024 ஆம் ஆண்டில் பாரிய சவாலாகும்.

- மதுபான உற்பத்தி நிலையங்களுக்கு இலக்குகளை வழங்குவதுடன் குறித்த இலக்குகளின் அடைவு தொடர்பில் மாதாந்தம் மதிப்பீடு செய்தல்.

- குடிக்க தயார் (ரெடி டு டிரிங்) போன்ற புதிய மதுபான உற்பத்தியாளர்களை வெளிநாட்டு சந்தைக்கு அறிமுகப்படுத்துதல், வெளிநாட்டு சந்தைக்காக புதிய நுண் மதுபான உற்பத்தி உரிமங்களை அறிமுகப்படுத்துதல், நேரடி ஏற்றுமதிக்காக மதுபான உரிமங்களை வழங்குதல் மற்றும் துறைமுக நகரத்திற்கான மதுபான உரிமம் வழங்குவதற்கான புதிய விதிகள் தயாரிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- சட்டவிரோத மதுபானத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் மதுபான உற்பத்தியை அதிகரிப்பதற்காக நாடு முழுவதிலுமாக 39,000 குற்ற அறிக்கை அறிக்கைகள் மற்றும் 4,500 தொழில்நுட்ப குற்ற அறிக்கை கண்டுபிடிப்பக்களை மேற்கொள்வதற்கு மதுவரி அதிகாரிகளுக்கு இலக்குகளை வழங்குதல்.

- நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபானங்கள் மற்றும் வெளிநாட்டில் இறக்குமதி செய்யப்படும் மதுபான போத்தல்களில் ஒட்டப்படும் போலி பாதுகாப்பு ஸ்டிக்கர் மீது சோதனை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- மதுபான போத்தல்களில் ஒட்டப்படும் பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்பின் வினைத்திறனை மேம்படுத்த பாதுகாப்பு ஸ்டிக்கரின் நிறம், வடிவம், அளவு மற்றும் வடிவமைப்பை மாற்றுதல்.

- பாதுகாப்பு ஸ்ரிக்கர்கள் தொடர்பான முறைப்பாடுகள் மீது நடவடிக்கை எடுக்க ஒரு பிரிவை நிறுவுதல் மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள் குறித்து நடவடிக்கை

எடுப்பதற்காக தலைமை அலுவலகத்தில் அதிகாரிகள் குழுவை நியமித்தல்.

- மதுபான உற்பத்தி நிலையங்களில் சிசிடிவி கேமரா பொருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- 2024 ஆம் ஆண்டிற்கான வெ.ம.04 புதிய மதுபான உரிமங்களை வழங்குதல் மற்றும் சுற்றுலா சபையால் அங்கீகரிக்கப்பட்ட வெ.ம.7,8 மென்மையான மதுபான உரிமங்களை வழங்குதல் மற்றும் வெ.ம.11,22பி போன்ற உரிமங்களை வழங்குதல்.

- உற்பத்தி செய்யப்படும் போதிலான ஒப்பந்தத்தின் பிரகாரம் வரி செலுத்தத் தவறிய தயாரிப்பாளர்களிடமிருந்து உரிய வரிகளை அறவிடுதல்.

- இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் ஊடாக இயற்கை கள்ளுக்கான தரங்களை அறிமுகப்படுத்துவதடன் மேற்படி தரங்களை அறிமுகப்படுத்தி சந்தைக்கு செயற்கை கள்ளின் விநியோகத்தை தடுத்தல் மற்றும் தரமான கள்ளை சந்தைக்கு விநியோகிப்பதன் மூலம் கள்ளுக்கான கேள்வியை அதிகரித்தல்.

- வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே இயற்கைக் கள்ளை பிரபலப்படுத்த இயற்கை கள்ளு சுற்றுலா விடுதிகளை அறிமுகப்படுத்துதல்.

- வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் மதுசாரத்தினால் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களுக்காக தயாரிக்கப்பட்ட தரங்களை வெளியிடுதல்.

- கழிவுகள் மீது விதிக்கப்படும் வரியை முகாமைத்துவம் செய்வதற்காக கழிவுகள் மீது நடைமுறை சதவீதங்களை அறிமுகப்படுத்திய பின்னர் மதுவரி அறிவித்தல்களை வெளியிடுதல்.

- சீருடை மற்றும் நெறிமுறைகள் தொடர்பாக திணைக்களத்தின் கட்டளைகள் தொடர்பான கையேடு தயாரித்தல் மற்றும் மேற்படி கட்டளைகள நடைமுறைப்படுத்துதல்.

- குடிபானமல்லாத மதுபானங்களுக்கான வரியை அதிகரிப்பதற்காக குடிபானமல்லாத மதுபானங்களுக்கான வரியை ரூ.6.00 லிருந்து 10.00 ஆக உயர்த்தி புதிய உரிமங்களை வழங்குதல்.

- பீடித் தொழிலை ஒழுங்குபடுத்துதல், புகையிலை வரிச் சட்டத்தைத் திருத்துதல், உரிய முறையில் வரி வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மதுவரி அறிவித்தலை வெளியிடுதல் என்பவற்றினூடாக பீடித் தொழிலுடன் தொடர்புடைய அனைத்து உற்பத்தியாளர்களையும் பதிவு செய்தல்.

- உள்நாட்டு கைத்தொழில் மதுசாரம் மற்றும் மதுபான உற்பத்தி செய்யும் மதுசாரங்கள் என்பவற்றின் மீதான வரித் திருத்தங்கள் உரிய முறையில் அமுல்படுத்தப்பட்டுள்ளதா என்பதை ஆராய்தலும் மேற்பார்வை செய்தலும்.

- இடர்நேர்வு முகாமைத்துவ அலகொன்றை தாபிப்பதன் மூலம் மதுவரி வருமானத்தை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை இனங்காணல்.

- இலங்கை மதுவரித் திணைக்களத்தில் 23 பிராந்திய அலுவலகங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டடங்களில் செயற்படுகின்றன. அவற்றில் கொழும்பில் அமைந்துள்ள போதைப்பொருள் தடுப்புப் பிரிவு மற்றும் நாடளாவிய ரீதியிலுள்ள விசேட நடவடிக்கைப் பிரிவுகள் என்பன கடுமையான இட நெருக்கடியின் கீழ் பேணப்படுகிறது. எனவே வாடகை அடிப்படையில் இயங்கும் அலுவலகங்களுக்கு நிரந்தர மதுவரி நிலையங்களை அமைத்தல் பிரதான இலக்காகவுள்ளது.

- பூகொடை மதுவரி நிலையத்துடன் இணைந்த மதுவரித் திணைக்களத்திற்குச் சொந்தமான நவீன கட்டிடம் ஒன்றில் இரசாயன ஆய்வுகூடம் ஒன்றை நிறுவும் பொருட்டு தேவையான நடவடிக்கைகள் 2021 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் எஞ்சிய வேலைகளை மேற்கொள்ள ரூ. 100 மில்லியன் ஒதுக்கீடு 2023 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் ஊடாக அங்கீகரிக்கப்பட்டது அதன்படி, பிரித்தல், ஆய்வுகூட பணிகளுக்கு தேவையான உபகரணங்களை வாங்குதல் மற்றும் வீட்டு உபகரணங்களை வாங்குதல் போன்ற ஆய்வுகூடத்தின் அடிப்படை பணிகள் 2024 ஆம் ஆண்டில் நிறைவடையும் என்று

எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மத்திய ஆய்வுகூடத்தின் நிர்மாணத்தின் மூலம் உயரந்த தர மதுபானத்தை சந்தைக்கு வழங்கும் திறன் பலப்படுத்தப்படும்.

- RASED முறையின் சகல தேவைகளையும் இனங்கண்டு அம்மென்பொருள் முறையை விருத்தி செய்வதற்கு சேவை வழங்குனர் ஒருவரை இனங்காணுதல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மொடியூலர் முறையில் மேற்கொள்ளுவதற்கு திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

2:2:2 சவால்கள்

- 2024 இற்கான ரூ. 232 பில்லியன் வருமான இலக்கை அடைதல், மதுபான உற்பத்திகளின் விலை உயர்வடைந்தமை, மதுசாரங்களின் உற்பத்திச் செலவு உயர்வடைந்தமை, நாட்டின் பணவீக்கம், ஆற்றல் குறைவடைந்தமை போன்ற காரணங்களால் சவாலுக்குரிய விடயமாகவுள்ளது. பீடி ஒன்றுக்கு விதிக்கப்பட்ட ரூ.2/= எனும் புதிய வரியைச் செயற்படுத்துதலின் ஊடாக 2024 இல் ரூபா 2 பில்லியன் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலும் சவாலுக்குரியதாகும்.

- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சகல மதுபானங்களிற்கும் பாதுகாப்பு ஸ்ரிக்கரை *(Fool Proof Sticker)* அல்லது டிஜிற்றல் உருவாக்கத்தினை *(Digital making)* பயன்படுத்துவது 2022 இன் ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கபட்டது. இந்த புதிய வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதில் ஆரம்பத்தில் எழுந்த பல்வேறு பிரச்சனைகளைத் தீர்த்து 2022 ஏப்ரல் மாதம் முதல் சகல உற்பத்திச்சாலைகளிற்கும் ஸ்ரிக்கர் ஒட்டுதல் செயற்படுத்தப்பட்டது. இச்செயன்முறையை ஒழுங்குபடுத்தி தொடர்ச்சியாக, சரியாக நடைமுறைப்படுத்துதல் திணைக்களத்திற்கு சவால் மிக்கதாகும்.இற்த சவாலை வெற்றிகொள்ள டிஜிற்றல் உருவாக்கத்தின் நிறம், வடிவம், அளவு மற்றும் வடிவமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- பீடிக் கைத்தொழில் தொடர்பாக அனைத்து உற்பத்தியாளர்களிடமிருந்தும் வரிகளைப் பெற பீடி உற்பத்தியாளர்களை பதிவு செய்ய வேண்டும்.

- *RASED* கருத்திட்டத்திற்கு தேவையான நிபுணத்துவம் இல்லாமை மற்றும் பொருத்தமான ஆலோசனை சேவையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- முழு திணைக்களத்தின் சீருடை ஊழியர்களின் சிரேஸ்ட அதிகாரிகள் ஓய்வு பெறுவதால் தலைமை அலுவலகத்தின் அதிகாரிகள் பற்றாக்குறை காரணமாக வரி சேகரிப்பது பெரிய சவாலாக உள்ளது. மேலும், மூன்றாம் நிலை அலுவலர்களிற்கு கடும் பற்றாக்குறை நிலவுகிறது. அதற்காக புதிதாக ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய போதிலும் புதிய ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ள அரசின் தீர்மானத்தின் மீது திணைக்களத்தின் செயலாற்றுகையை மேற்கொள்ளல் சவாலுக்குரியதாகும். எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டுக்கு புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- மதுவரி வருமானத்தை அதிகரிக்கும் வகையில் மதுபானங்களின் சில்லறை விற்பனை உரிமங்களை (வெ.ம.04) புதிதாக வெளியிடுதல் தொடர்பில் சமய, சமூக, அரசியல் ரீதியான இடைஞ்சல்கள் மொத்த செயலாற்றுகையிலும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது.

- ஆதரவளிப்புப் பிரிவிற்கு வாகனங்களைக் கொள்வனவு செய்வதில் உள்ள தடைகள், வாகனத்தைப் புதுப்பிப்பதற்குரிய உதிரிப்பாகங்கள் சந்தையில் பற்றாக்குறை என்பன வாகன நிர்வாகத்திற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் புதிய சாரதிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் தேவைப்பாடும் பாரியளவில் நிலவுகிறது.

2:3 நலன்புரி

- இலங்கை மதுவரித் திணைக்களத்தில் நலன்புரிச் சங்கம் ஒன்றை அமைத்தலின் ஊடாக முழுமையான சிற்றுண்டிச்சாலை மற்றும் அலுவலர்களின் நலன்புரியை வினைத்திறனுடன் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. 2023 ஆம் ஆண்டில், ஒரு முழுமையான சிற்றுண்டிச்சாலை பராமரிக்கப்பட்டது.

- அரச வருமானத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மதுவரி திணைக்களத்தில் கடமையாற்றும் அனைத்து பணியாட்டொகுதியினருக்கும்

  ஊக்குவிப்புக்காக (25%) ஊக்குவிப்புகளை வழங்குவதற்கான முன்மொழிவொன்றை நிதி அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், 2024 ஆம் ஆண்டு முதல் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அத்தியாயம் - 03

வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

3.3 நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று

3.4 இலங்கை மதுவரித் திணைக்களம் - மதுவரி வெகுமதி நிதியம்

3.5 நிதி நிலைமை பற்றிய கூற்று - மதுவரி வெகுமதி நிதியம்

3.6 நிதிப் பாய்ச்சற் கூற்று - மதுவரி வெகுமதி நிதியம்

3.7 நிதிக் கூற்றுக் குறிப்புகள்

3.8 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

3.9 நி.ஒ.208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுகள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு

3.10 நிதியல்லாச் சொத்துகளை அறிக்கையிடலின் செயலாற்றுகை

3.11 கணக்காய்வாளர் நாயகத்தின் பொழிப்பு அறிக்கை - இலங்கை மதுவரித் திணைக்களம் - (சிங்கள மொழிப் பதிப்பு) - இணைப்பு 1

3.12 கணக்காய்வாளர் நாயகத்தின் பொழிப்பு அறிக்கை - மதுவரி வெகுமதி நிதியம் - (சிங்கள மொழிப் பதிப்பு) - இணைப்பு 2

3.1 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தின் பொருட்டு நிதிச் செயலாற்றுகைக் கூற்று

திருத்தப்பட்ட பாதீட்டின் ஏற்பாடுகள்		குறிப்பு	உண்மை நிலை		
			2023	2022	
ரூ.			ரூ.	ரூ.	
-	**வருமானப் பெறுகைகள்**		**171,273,655,832.00**	**165,227,025,349.00**	
-	வருமான வரி	1	-	-	
182,000,000,000.00	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	171,273,655,832.00	165,227,025,349.00	ஏசிஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		**171,273,655,832.00**	**165,227,025,349.00**	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		**1,764,656,721.00**	**636,428,953**	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		1,458,000,959.00	380,000,000.00	ஏசிஏ-3
-	வைப்புகள்		254,662,745.00	207,733,044.00	ஏசிஏ-4
-	முற்பணக் கணக்குகள்		51,993,017.00	48,695,909.00	ஏசிஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**1,764,656,721.00**	**636,428,953.00**	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ ழ்ரீ (அ,(ஆ)**		**173,038,312,553.00**	**165,863,454,302.00**	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		169,672,076,255.00	163,894,015,184.00	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ ழ்ரீ (இ)-(ஈ)		3,366,236,298.00	1,969,439,118.00	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		**3,049,367,108.00**	**1,770,977,060.00**	
1,175,823,830.00	**சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்**	5	888,601,238.00	1,048,170,199.00	
2,227,676,170.00	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	2,154,636,847.00	716,982,651.00	ஏசிஏ-2(ii)
7,000,000.00	**மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்**	7	6,129,023.00	5,824,210.00	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
3,410,500,000.00	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**3,049,367,108.00**	**1,770,977,060.00**	
	மூலதனம் செலவினம்		**235,218,685.00**	**68,247,037.00**	
42,000,000.00	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	33,555,451.00	24,362,844.00	
445,000,000.00	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	196,488,034.00	41,421,817.00	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசிஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
20,000,000.00	திறன் விருத்தி	14	5,175,200.00	2,462,376.00	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	
507,000,000.00	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**235,218,685.00**	**68,247,037.00**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		202,366,622.00	188,973,432.00	ஏசிஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		38,729,596.00	42,959,371.00	ஏசிஏ-5

	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்			-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)			241,096,218.00	231,932,803.00	
	மொத்த செலவினம் ஐ ஸ்ரீ (ஊ+எ+ஏ)			**3,525,682,011.00**	**2,071,156,900.00**	
-	**டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ=(உ-ஐ)**			(159,445,713.00)	(101,717,782.00)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி			(159,445,713.00)	(102,108,741.00)	**ஏசிஏ-7**
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி			-	390,959.00	**ஏசிஏ-3**
				(159,445,713.00)	(101,717,782.00)	

3.2 நிதி நிலைமைக் கூற்று (2023 டிசம்பர் 31ஆம் திகதி வரை)

ஏசீஏ-பி

2023 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமை பற்றிய கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2023 ரூபா	2022 ரூபா
நிதியல்லாச் சொத்துக்கள்			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசிஏ-6	2,179,655,327.00	1,755,263,088.00
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசிஏ-5/5(அ)	142,298,622.00	155,562,043.00
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசிஏ-3	-	390,959.00
மொத்த சொத்துக்கள்		**2,321,953,949.00**	**1,911,216,090.00**
தேறிய சொத்துக்கள்/உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(234,969,113.00)	(169,409,568.00)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		2,179,655,327.00	1,755,263,088.00
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	**ஏசிஏ-5(ஆ)**		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசிஏ-4	377,267,735.00	324,971,611.00
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசிஏ-3	-	390,959.00
மொத்தப் பொறுப்புக்கள்		**2,321,953,949.00**	**1,911,216,090.00**

பக்க இலக்கம் 09 முதல் 37 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 98 முதல் 57 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

… ஒப்பம்…….	…… ஒப்பம்…….	…… ஒப்பம்……..
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்
பெயர் : கே.எம்.மகிந்த சிறிவர்த்தன	பெயர் : எம்.ஜே.குணசிறி	பிரதான கணக்காளர்/பணிப்பாளர்(நிதி)
பதவி: செயலாளர்	பதவி: மதுவரி ஆணையாளர் நாயகம்	பெயர்: பி.அஜிதா சாந்தனி
திகதி :	திகதி :	திகதி :

3.3 நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசிஏ.சீ

நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை 2023 ரூபா	2022 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		-
மொத்த வரிப் பெறுகைகள்	171,273,655,832.00	165,227,025,349.00
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	1,778,379.00
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	135,663,272.00	91,125,084.00
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	1,458,000,959.00	380,000,000.00
முற்பணங்களை அறவிடல்	44,682,987.00	42,573,817.00
வைப்புக்களின் பெறுகை	254,662,745.00	207,733,044.00
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**173,166,665,795.00**	**165,950,235,673.00**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	3,037,900,985.00	1,765,793,859.00
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	6,129,023.00	5,824,210.00
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	7,223,672.00	2,091,048.00
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	169,672,076,255.00	163,894,015,184.00
முற்பணக் கொடுப்பனவு	31,320,831.00	37,448,523.00
வைப்புக் கொடுப்பனவு	202,366,622.00	188,973,432.00
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**172,957,017,388.00**	**165,894,146,256.00**
தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**209,648,407.00**	**56,089,417.00**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து ஆக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
முதலீடு	210,039,366.00	55,698,458.00
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு	**210,039,366.00**	**55,698,458.00**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(210,039,366.00)**	**(55,698,458.00)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+ஊ+ஐ	**(390,959.00)**	**390,959.00**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		

உள்ளூர்க் கடன்கள்		-	-
வெளிநாட்டுக் கடன்கள்		-	-
பெற்ற நன்கொடைகள்		-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)		-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:			
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்		-	-
வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்		-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)		-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)		-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)			-
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	**(390,959.00)**	-	-
டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி		-	**390,959.00**

3.4 நிதி செயலாற்றுகைக் கூற்று – மதுவரி வெகுமதி நிதியம்

2023 டிசம்பர் 31 ஆம் திகதி நிறைவடைந்த வருடத்திற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று		
(ரூபாவில்)		
	2023	**2022**
வருமானம்	-	
கூட்டுத் தண்டப்பணப் பெறுகை	162,558,319	154,560,181
சிகரட் தண்டப்பணம்	10,732,540	4,986,600
மொத்த வருமானம்	**173,290,859**	**159,546,781**
செலவு	-	-
வெகுமதி நிதிக் கொடுப்பனவு	89,465,894	79,724,620
அரசிறை வருமானத்திற்கான கொடுப்பனவுகள் - கூட்டுத் தண்டப் பண வருமானம் 15%	24,383,747	23,184,027
அரச வருமானத்திற்கான கொடுப்பனவு - சிகரட் தண்டப்பணம் 75%	8,049,405	3,739,950
புகையிலை நிதியத்திற்கான கொடுப்பனவு	2,683,136	1,077,275
விசேட சுற்றிவளைப்புகள்	-	
கழிவு		99,890
மதிப்பிறக்கம் (அட்டவணை 01)	32,755	
உரிமதாரர்களிற்கு மீளச் செலுத்துதல்	11,707,328	3,276,488
மொத்தச் செலவு	-	-
செலவு	136,322,265	**111,102,250**
மிகை / (குறைபாடு)	36,968,594	**48,444,530**

தயாரித்தவர் :- ஒப்பம்
பரிசீலித்தவர்:- ஒப்பம்.

ஒப்பம்
ஜி.அஜிதா சாந்தனி
பிரதம நிதி அலுவலர்

3.5 நிதி நிலைமை பற்றிய கூற்று - மதுவரி வெகுமதி நிதியம்

இலங்கை மதுவரித் திணைக்களம் – மதுவரி வெகுமதி நிதியம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை பற்றிய கூற்று		
பண அலகு ரூபாவில்	**2023**	**2022**
சொத்துகள்	-	-
நடைமுறைச் சொத்துகள்		
தொ.க.அ பெறுகைகள், கொடுப்பனவுக் கணக்குகள்	229,635,702	192,517,335
பெற வேணடிய கூட்டுத் தண்டப்பணம்	-	9,651,195
பெற வேணடிய சிகரட் தண்டப்பணம்	-	960,400
	229,635,702	**203,128,930**
நடைமுறையல்லாச் சொத்துகள்		
காணிகளும் கட்டடங்களும்(அட்டவணை02)	47,134,000	47,134,000
வாகனங்கள் (அட்டவணை 03)	606,361	808,481
தளபாடங்களும் உபகரணமும் (அட்டவணை 04)	9,172,135	904,357
மின் உபகரணங்கள் (அட்டவணை 05)	5,280	9,918
அலுவலக உபகரணம் (அட்டவணை 06)	44,858,986	11,131,732
விளையாட்டு உபகரணம் (அட்டவணை 07)	2,514	3,142
நூலக புத்தகங்கள் (அட்டவணை 08)	16,293	20,366
ஏனைய உபகரணம் (அட்டவணை 09)	3,397	3,882
மதிப்பிறக்கச் சொத்துகளை கொள்வனவு செய்தல	-	49,687,107
மதிப்பிறக்க ஒதுக்கீட்டு நிதியம்	30,686,023	18,974,695
	132,480,989	**128,677,682**
மொத்த சொத்துகள்	**362,116,691**	**331,806,612**
பொறுப்புகள்		
குறுகிய கால பொறுப்புகள்		
அரச வருமானத்திற்கு செலுத்த வேண்டிய கூட்டுத்தண்டப் பணம்	-	1,447,679
அரச வருமானத்திற்கு செலுத்த வேண்டிய சிகரட் பணம்	-	720,300
புகையிலை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை	-	240,100
செலுத்த வேண்டிய வெகுமதி நிதியம்	-	7,238,396
நீண்ட கால பொறுப்புகள்		
புகையிலை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய நிதி	24,363,751	21,440,516
தேறிய சொத்துகள்	337,752,940	**300,719,620**
தேறிய சொத்துகள்/பங்குகள்		
திரட்டிய நிதியம்	300,719,620	252,775,090
முந்தைய வருட சீராக்கல்	64,726	(500,000)
(குறைபாடு) / மிகை	36,986,594	48,444,530
மொத்தப் பங்குகள்	337,752,940	**300,719,620**

தயாரித்தவர் :- ஒப்பமிடப்பட்டது
பரிசீலித்தவர்:- ஒப்பமிடப்பட்டது

பக்க இலக்கம் 07 முதல் 08 வரையான கணக்குத் தகவல்கள் மற்றும் பக்க இலக்கம் 18 முதல் 44 வரை உள்ளடங்கியுள்ள குறிப்புகளின் விபரமும் இந்த நிதிக் கூற்றுகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலிற்கான பொறுப்பை நிர்வாகக் குழு கொண்டுள்ளது. 2023 தொடர்பில் திருத்திய நிதிக்கூற்றை நிர்வாகக் குழு அங்கீகரித்தது.

ஒப்பம்
ரோஹண சேனாரத்ன
மதுவரி ஆணையாளர்(நிர்வாகம்)

ஒப்பம்
பி.எச்.சி.சில்வா
மதுவரி ஆணையாளர்(சட்ட வலப்படுகைகல்)

ஒப்பம்.
ஏம்.ஜே.குணசிறி
மதுவரி ஆணையாளர் நாயகம்

3.6 நிதிப் பாய்ச்சற் கூற்று- மதுவரி வெகுமதி நிதியம்

இலங்கை மதுவரித் திணைக்களம் – மதுவரி வெகுமதி நிதியம்
2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிதிப் பாய்ச்சற் கூற்று
(ரூபாவில்)

	2023	2022
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
பெறுகைகள்		
கூட்டுத்தண்டப்பணப் பெறுகை	172,209,513	164,831,863
சிகரட் தண்டப்பபணப் பெறுகை	11,692,940	4,309,100
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான மொத்தப் பெறுகை	**183,902,453**	**169,140,963**
கொடுப்பனவு		
கூட்டு வெகுமதி நிதி	96,704,291	87,428,382
அரசிறை வருமானத்திற்கு	34,601,132	27,956,604
விசேட சுற்றிவளைப்பிற்கு	-	-
மதிப்பிறக்க ஒதுக்கீட்டு நிதியத்திற்கு(அட்டவணை 01)	11,707,328	3,276,488
உரிமதாரர்களிற்கு மீளக் கொடுப்பனவு	-	-
ஏனையவை	3,771,335	599,890
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான மொத்தக் கொடுப்பனவு	**146,784,086**	**119,261,364**
தேறிய நிதிப் பாய்ச்சல்	**37,118,367**	**49,879,599**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்		-
காசில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ குறைவு	37,118,367	49,879,599
காலப்பகுதியின் ஆரம்பத்தில் இருந்த காசு	192,517,335	142,637,736
2022.12.31 திகதியன்று பண மீதி	**229,635,702**	**192,517,335**

தயாரித்தவர்:-ஒப்பம்

பரிசீலித்தவர்:- ஒப்பம்

ஒப்பம்

ஜி.அஜிதா சாந்தனி

பிரதான நிதி அலுவலர்

3.7 நிதியியற் கூற்றுக் குறிப்புகள்

வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டு விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு (ரூ.)	இறுதி மதிப்பீடு (ரூ.)	தொகை (ரூ.)	இறுதி வருமான மதிப்பீடு % ஆக (ரூ.)
1002.04.01	மதுபானம்	214,000,000,000.00	181,000,000,000.00	170,259,621,094.00	94.07
1002.06.00	புகையிலை வரி	3,035,000,000.00	1,000,000,000.00	1,014,034,738.00	101.40

3.8 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடு		உண்மைச் செலவினம் (ரூ.)	பயன்படுத்தப்பட்ட ஏற்பாட்டை இறுதி ஏற்பாட்டுத் தொகையின் சதவீதம் (%) ஆக
	ஆரம்ப ஏற்பாடு (ரூ.)	இறுதி ஏற்பாடு (ரூ.)		
மீண்டெழும்	3,410,500,000.00	3,410,500,000.00	3,049,367,108.00	89.41
மூலதன	507,000,000.00	507,000,000.00	235,218,685.00	46.39

3.9 நி.ஒ.208 இன் பிரகாரம் திணைக்களங்களின் முகவராக இலங்கை மதுவரி இத்திணைக்களத்திற்கு 2022 இல் வழங்கப்பட்ட ஒதுக்கீடு

கிடைக்கப்பெறவில்லை

3.10 நிதியல்லாச் சொத்துகளை அறிக்கையிடலின் செயலாற்றுகை

சொத்துகளின் குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2023 அன்று பொருட் கணக்கெடுப்பு அறிக்கையின்படி மீதி (ரூ.)	31.12.2023 திகதிய நிதி நிலை அறிக்கையின் படி மீதி (ரூ.)	எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியவை	வளர்ச்சி % ஆக அறிக்கையிடல்
9151	கட்டடங்களும் அமைப்புகளும்	528,597,207.71	528,597,207.71		100%
9152	இயந்திர உபகரணங்கள்	844,008,490.35	844,008,490.35		100%
9153	காணிகள்	384,125,000.00	384,125,000.00		100%
9154	தொட்டுணர முடியாத சொத்துகள்	3,803,200.00	3,803,200.00		100%
9155	உயிரியல் சொத்துகள்	-	-		-
9160	நடைபெறும் பணிகள்	190,803,318.24	190,803,318.24		100%
9180	குத்தகைக்கு விடப்பட்ட சொத்துகள்	228,318,111.00	228,318,111.00		100%

3.11 கணக்காய்வாளர் நாயகத்தின் பொழிப்பு அறிக்கை - இலங்கை மதுவரித் திணைக்களம் (சிங்கள மொழிப் பதிப்பு) - இணைப்பு 1

3.12 கணக்காய்வாளர் நாயகத்தின் பொழிப்பு அறிக்கை - மதுவரி வெகுமதி நிதியம் - (சிங்கள மொழிப் பதிப்பு) - இணைப்பு 2

அத்தியாயம் - 04

செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 அறிமுகம்

4.2 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்

- 4.2.1 நிர்வாகப் பிரிவு
- 4.2.2 வருமானப் பிரிவு
- 4.2.3 சட்ட வலுப்படுத்தற் பிரிவு
- 4.2.4 கணக்கீட்டுப் பிரிவு
- 4.2.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
- 4.2.6 மனித வளப் பிரிவு
- 4.2.7 தகவல் தொழில்நுட்பப் பிரிவு
- 4.2.8 போக்குவரத்து, ஆதரவளிப்புப் பிரிவு
- 4.2.9 கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு
- 4.2.10 புள்ளிவிபரப் பிரிவு
- 4.2.11 வழங்கல்தொடர் ஒழுங்கமைப்புப் பிரிவு
- 4.2.12 சட்டப் பிரிவு

4.1 அறிமுகம்

2023 இற்கமைய நிதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயற் திட்டத்திற்கிணங்க நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் ஒவ்வொரு பிரிவிற்கேற்பவும் தயாரிக்கப்பட்டது. 2023 இன் திருத்தஞ் செய்யப்பட்ட செயற் திட்டத்தின் அடிப்படையில் இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட வருமான இலக்கு ரூ. 182 பில்லியனாகும். இலங்கை மதுவரித் திணைக்களத்தால் ரூ. 171.27 பில்லியன் வருமானமாக திறைசேரிக்கு வழங்கப்பட்டதுடன் ரூ.7.3 பில்லியன் வரி விலக்களிப்புடன் சேர்த்து மொத்த வருமானம் ரூ.178.57 பில்லியனாகும். அது சதவீதமாக 98% என அறிக்கையிடப்பட்டுள்ளது. 2023 இல் நாடு எதிர்கொண்ட பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் பெற்றுக்கொண்ட இந்த வளர்ச்சி சந்தோசமானதொரு விடயமாகும்.

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மொத்த செயலாற்றுகைக்குப் பங்களிப்புச் செய்த திணைக்களத்தின் சகல பிரிவுகளையும் கவனத்திற் கொள்கையில், சட்ட வலுப்படுத்தல் பிரிவு, சட்டப் பிரிவு அற்றும் மனித வளப்பிரிவு ஆகிய பிரிவுகளிற்கான வளர்ச்சி 100% ஐத் தாண்டியுள்ளது என்பதை சந்தோசமாகக் குறிப்பிட முடியும். அவ்வாறே ஏனைய 8 பிரிவுகளுக்கான சதவீதம் 90% - 100% வரை உள்ளது என்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

நிர்வாகப் பிரிவின் வளர்ச்சி 95% செயலாற்றுகையாக காணப்படுவதுடன் 2023 ஆம் ஆண்டில் 21 பிரதான மதுவரி பரிசோதகர் பதவிகளுக்கு பதவியுயர்வு வழங்கக்கூடியதாக இருந்தது. 21 பிரதான மதுவரி பரிசோதகர் பதவிகளுக்கான பதவி உயர்வு மற்றும் பிரதி மதுவரி ஆணையாளர் பதவிகளுக்கு நேர்முகப்பரீட்சை நடத்துதல் போன்றவற்றுக்கான ஆரம்ப பணிகள் கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2023 ஆம் ஆண்டில் இந்த இரண்டு புதிய ஆட்சேர்ப்புக்களையும் மேற்கொள்ள முடிந்தத. வருடக் கணக்காக வழங்கப்படாதிருந்த அலுவலர்களின் பதவியுயர்வு மற்றும் புதிய ஆட்சேர்ப்பு என்பன குறிப்பிட்ட அளவில் 2022 இல் மேற்கொள்ளப்பட்டன. மேலும் பல்வேறு பதவிகளில் வெற்றிடங்கள் நிலவிய போதிலும், புதிதாக ஆட்சேர்ப்பு செய்வதில்லை என்ற அரச தீர்மானத்தின் மீது, அவ்வெற்றிடங்களை நிரப்ப இயலாதிருந்ததுடன் 2022 இல் நாட்டில் நிலவிய எரிபொருள், மின்சார நெருக்கடிகள் மற்றும் நாட்டில் காணப்பட்ட ஸ்திரமற்ற நிலைமை போன்றவற்றின் மத்தியில் இத்தகைய வெற்றியை அடைந்தமை சிறப்பான விடயமாகும்.

முன்னர் குறிப்பிட்டவாறு வருமானம் சேகரிக்கும்போது பல்வேறு சிரமங்களிற்கு முகங் கொடுத்த போதிலும் திணைக்கள வரலாற்றில் 111 வருடங்களின் பின்னர் அதிகூடிய வருமானமான ரூபா 171.27 பில்லியனை திறைசேரிக்கு வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி வருமானப் பிரிவின் வளர்ச்சி 98.1% ஐயும் மதுபானம் மற்றும் பீடி புகையிலை வரி 93% ஐயும் அடைந்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, மனிதவளப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவின் *ASYCUDA* முறைமை *RASED* முறைமைக்கான ஆலோசனைச்சேவையின் நிதி முன்மொழிவை பெற்றுக்கொள்ளுதலும் கருத்திட்டத்தை வரைபு செய்தலும் ஆலோசனை சேவையின் நிதி முன்மொழிவைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கருத்திட்ட வரைவு, ஆதரவளிப்பு பிரிவின் போக்குவரத்து மற்றும் உத்தேச கட்டிட நிர்மாணப் பணிகள், வழங்கல் தொடர் ஒழுங்கமைப்புப் பிரிவின் ஸ்டிக்கர் திட்டத்தின் உள்ளூர் ஸ்டிக்கர் பணி மற்றும் சமூக பாதுகாப்பு பிரிவின் மதுபானம் மற்றும் போதைப்பொருள் விழிப்புணர்வு மற்றும் சமூக நலன்புரி நடவடிக்கைகள் என்பன தமது செயலாற்றுகையை 100% இற்கு வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளதுடன், வருமான பிரிவு கணக்கீட்டுப் பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு, கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு புள்ளிவிபரவியல் பிரிவு மற்றும் வழங்கல் தொடர் ஒழுங்கமைப்புப் பிரிவு என்பவற்றின் நிறைவேற்றுகை 100% ஐ அண்மித்ததாக நிறைவேற்றியுள்ளன.

தகவல் தொழில்நுட்பப் பிரிவின் *RAMIS* முறைமை பற்றிய நடவடிக்கைகளின் வளர்ச்சி 50% – 74% மட்டத்தில் பேணப்பட்டது எனினும் 2022 இல் அலுவலர் பயிற்சி நடவடிக்கைகளிற்கான நிதி ஏற்பாடு போதியளவில் கிடைக்கப் பெறாத போதும்

கிடைக்கப் பெற்ற சகல ஏற்பாடுகளையும் ஏனைய தலைப்புகளின் கீழ் எஞ்சிய ஏற்பாடுகளையும் பயன் படுத்தி நாட்டில் நிலவிய பல்வேறு நெருக்கடி நிலைமைகளின் மத்தியிலும் அலுவலர்களின் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் ஊடாக கள்ளைத் தரப்படுத்தல் பொருட்டு தேவையான ஆரம்ப ஆராய்ச்சி நடவடிக்கைகள் 2022 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டில் அவை வெற்றிகரமாக இறுதிக்கட்டத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளத. அதற்கிணங்க ஆராய்ச்சி நடவடிக்கைகளின் வளர்ச்சி 85% அளவான மட்டத்தை எட்டியிருந்தது. நுகர்வோருக்கு தேவையான தரத்தில் மதுபானங்கள் கிடைக்கின்றனவா என்பதை ஆராய்வதற்காக ஆய்வுகூடமொன்றை நிறுவுவதற்கு 2023 வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, அதே நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்படுகின்றன.

எனினும், இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 12 பிரதான பிரிவுகளின் வளர்ச்சி வீதம் 90% இற்கு மேல் இருத்தல் விசேடமானதாகும். அதன் படி, இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகையின் உண்மை வெளியீடு எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக, வெற்றிகரமான உயர் வளர்ச்சியைக் காட்டுகிறது.

4.2 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (2023 செயற் திட்ட அடிப்படையில்)

திணைக்களத்தின் செயற்பாட்டுப் பிரிவுகள்	விசேட சுட்டிகள்		உண்மை வெளியீடு, எதிர்பார்த்த வெளியீட்டு சதவீதமாக (%)				
			>100%	90 % - 100%	75% - 89 %	50 % - 74 %	0% - 50%
4.2.1 நிர்வாகப் பிரிவு	நிர்வாகம் மற்றும் தாபன நடவடிக்கைகள்			95%			
4.2.2 வருமானப் பிரிவு	2023 இன் எதிர்பார்த்த வருமானத்தை சேகரித்தல்	மதுபானம்		98%			75%
		புகையிலை					93%
		பீடி புகையிலை வரி					
4.2.3 சட்ட வலுப்படுத்தல் பிரிவு	• உரிய கட்டளைச் சட்டங்களை செயற்படுத்தல்; போதைப்பொருட் குற்ற அறிக்கைகள் புகையிலை தொடர்பான சுற்றிவளைப்பு		104%				
	• மதுவரி உரிமங்களிற்கான தொழில்நுட்ப குற்ற அறிக்கைகள்		137%				
4.2.4 கணக்கீட்டு பிரிவு	2023 வருடத்தின் சகல கணக்கீட்டு நடவடிக்கைகள்			95%			
4.2.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு	2023 வருடத்தில் மேற்கொள்ள வேண்டிய உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள்			100%			
4.2.6 மனித வளப் பிரிவு	• சகல அலுவலர்களிற்கும் பயிற்சி		129%				
	• அலுவலர் மேம்பாடு						
4.2.7 தகவல் தொழில்நுட்பப் பிரிவு	இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்						
	புதிய வேலைத்திட்டங்களை செயற்படுத்தல்	• RAMIS முறைக்கு இடைவெட்டுமுகத்தின் ஊடாக தரவு வழங்கல்			50%		
		• ASYCUDA முறை ஊடாக இணைய வசதிகள் வழங்கல்		100%			
		• RASED முறைக்கான ஆலோசனைச் சேவைக்கு நிதி முன்மொழிவை மொரட்டுவை பல்கலைக்கழகத்திலிருந்து பெறுதல்		100%			
		சுயுளுநுனு வேலைத்திட்டத்தின் ளுசுளு முதல் வரைவைத் தயாரித்தல்		100%			
		• ஸ்ரிக்கர் வேலைத்திட்டத்தை செயற்படுத்தத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைத் தயாரித்தல், அதன் பொருட்டு உடன்படிக்கையைச் செய்தல்.					20%
4.2.8 போக்குவரத்து, ஆதரவளிப்பு பிரிவு	பிரேரிக்கப்பட்ட கட்டடங்களின் நிர்மாண நடவடிக்கைகள்			100%			
	போக்குவரத்து, ஏனைய பணிகள்			90%			
4.2.9 கற்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு	கற்கை நடவடிக்கைகள்			92%			
	ஆராய்ச்சி நடவடிக்கைகள				85%		
4.2.10 புள்ளிவிபரப் பிரிவு	புள்ளிவிபர நடவடிக்கைகளும் தரவு வெளியிடுதலும்			95%			
4.2.11 வழங்கல்தொடர் ஒழுங்கமைப்புப் பிரிவு	ஸ்ரிக்கர் வேலைத்திட்டம்	உள்நாடு		95%			
		வெளிநாடு		100%			
4.2.12 சட்டப் பிரிவு	சட்ட தேவைப்பாடுகள்		287%				
	எதிர்பார்த்த புதிய தேர்ச்சிகள்						
4.2.13 சமூகப் பாதுகாப்புப் பிரிவு	மதுபானம், போதைப்பொருள் விழிப்புணர்வு மற்றும் சமூக நலன்புரி செயற்பாடுகள்			100%			
	தரமான மதுபானங்களை வழங்குவதன் மூலம் சுகாதார சீர்கேடுகளிலிருந்து மக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்				85%		

அத்தியாயம் - 05

நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை(SDG) அடையும் செயலாற்றுகை

5.1 அறிமுகம்

5.2 நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றம்

5.1 அறிமுகம்

நிலைபேண்தகு அபிவிருத்தி பற்றிய தேசியக் கொள்கை, 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேண்தகு அபிவிருத்தி பற்றிய சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி தொடர்பான சபையின் வழிகாட்டலின் கீழ் சகல அரச நிறுவனங்கள், கல்வியியல் நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள் என்பன, 2030 இல் நிறைவேற்ற வேண்டிய நிலையான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு 17 நிலையான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுதற்காக செயற்படுத்த வேண்டிதொரு வேலைத்திட்டமாகும். இலங்கையின் நிலையான அபிவிருத்தி பொருட்டு அரச வருமானம் சேகரிக்கும் பிரதான மற்றும் பொறுப்புவாய்ந்த நிறுவனம் ஒன்றாக இலங்கை மதுவரித் திணைக்களமானது, 2022 இன் செயற் திட்டத்தை இனங்காணுகையில் 17 நிலையான அபிவிருத்தி இலக்குகளில் பிரதானமாக 05 இலக்குகளை செயற்படுத்துவதற்கு ஒவ்வொரு பிரிவுத் தலைவர்களுடனும் கலந்துரையாடி உடன்பாடொன்று எட்டப்பட்டது. அவ்விலக்குகளாவன, இலக்கு 01, 03, 12, 16, 17 ஆகும். இது பற்றி விரிவாக ஐந்தாம் அத்தியாயத்தின் 5.2 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட விடயங்களில் விசேடமாக சகல விதத்திலும் வறுமையை ஒழிக்கும் முதலாவது இலக்கை செயற்படுத்தும் பொருட்டு 2023இல் எம்மால் ரூபா 178.57 பில்லியன் வருமானத்தை சேகரிக்க முடிந்ததுடன், அது இலங்கையின் ஒட்டுமொத்த மக்களின் விருத்தி பொருட்டு பொதுத் திறைசேரிக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. வறுமையை ஒழிப்பதற்கு பிரதான காரணியாக பொருளாதார அபிவிருத்தியில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தும் சட்ட விரோத அற்ககோல் மற்றும் மதுபானங்களை சமுதாயத்திலிருந்து அகற்றுதல் மிக முக்கியமானதாகும். இப்பணியில் இலங்கை மதுவரித் திணைக்களம் விசேட பங்களிப்பை வழங்குகிறது. புகையிலைப் பாவனை மனித உடலுக்குத் தீங்கு விளைவிப்பது என்பதால் புகையிலைப் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் அரசிறை வருமானத்தை

உயர்த்துவதன் ஊடாக மக்களுக்குத் தேவையான நிவாரணத்தை வழங்கும் நோக்கில் பீடிக்கு புதிய வரிக் கொள்கையை (1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க புகையிலை சட்டம்) 2023.01.01 இலிருந்து செயற்படுத்த திட்டமிடப்படுவதுடன், அதன் ஊடாக அனைத்து பீடி உற்பத்தியாளர்களையும் பதிவு செய்து வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சுற்றிவளைப்பை மேற்கொள்வதன் மூலம் மாத்திரம் பிரச்சனைக்கு தீர்வை வழங்க முடியாது என்பதுடன் அதற்குரிய கேள்வியைக்குறைப்பது சிறப்பானதாகும். அதற்கிணங்க, சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அதற்குரிய ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து பொதுசன விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது.

பேண்தகு அபிவிருத்தி இலக்கு 03: வறுமைக்கும் நெருக்கடிக்கும் முகங்கொடுத்துள்ள மக்களின் நலன் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு பொருட்டு இலங்கை மதுவரித் திணைக்களம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகிறது. வருடாந்தம் மதுபானம் மற்றும் புகையிலை தொடர்பான உற்பத்திகளுக்கு வரியை அதிகரிப்பதனால் அதன் கொள்வனவாற்றலைக் குறைப்பதுடன் அவற்றுக்கான கேள்வியையும் குறைக்கும். பொதுமக்களிடையே மதுபானம் பெறக்கூடிய வரம்புகளைக் கடுமையாக்குதலினையும் வெளியிடப்படும் சட்ட ரீதியான மதுபானங்களை முறையான தரத்தில் உற்பத்தி செய்தலினையும் இயன்றவரை மக்களை மதுபானத்தைத் தவிர்ப்பதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதலினையும் சூழலுக்குப் பாதிப்பை குறைப்பதற்குரிய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதலையும் அது தொடர்பான முக்கிய நடவடிக்கைகளாகக் காட்டலாம்.

பேண்தகு அபிவிருத்தி இலக்கு 12: மதுபான உற்பத்தி செய்யும் சகல உற்பத்தியாளர்களும் அந்நடவடிக்கைகளின் போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய நடவடிக்கைளை மேற்கொண்டு நீர்நிலைகளைத் தூய்மையாக வைத்திருப்பதற்காக பொயிலரை செயற்படுத்தும்போதும் நீரை சுத்திகரிக்கும் போதும் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களின் அறிவுறுத்தல்களுக்கமைய உற்பத்தியாளர்கள் செயற்படுதல் ஊக்குவிக்கப்படுகிறது. மேலும், மதுபான நுகர்வின் பின்னர் அகற்றப்படும் வெற்றுப் போத்தல்கள் மற்றும் கான்களை அந்த அந்த இடங்களிலேயே போடுவதால் சூழல் மாசுபடுதலைத் தவிர்க்கும் பொருட்டு நாடு முழுவதும் உள்ள மதுபான விற்பனை

நிலையங்களில் 1650 கூடைகள் பொருத்தப்பட்டன.

பேண்தகு அபிவிருத்தி இலக்கு 16 மற்றும் 17 இன் கீழ், சகலருக்கும் நீதி வழங்கும் வகையில் கைது செய்யப்படும் தனிநபர்களுக்கு சித்திரவதை மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளாகாமல் இருத்தலை உறுதி செய்யும் பொருட்டு சகல சீருடை அலுவலர்களுக்கும் தொடர்ச்சியாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அரச வருமானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு எடுக்கப்படும் சகல நடவடிக்கைகளிலும் இலஞ்சம் மற்றும் ஊழலை கணிசமானளவில் குறைக்க சகல கடமைகளையும் பொறுப்புடனும் வெளிப்படைத் தன்மையுடனும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தொடர்ச்சியாக அலுவலர் பயிற்சிகள், இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் சட்ட வலுப்படுத்தல் அலுவலர்களுக்கு சமூக வன்முறையின்றி கடமையைச் செய்யத் தேவையான பயிற்சியை வழங்கவும் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2030 அளவில் இலங்கை மதுவரித் திணைக்களத்தில் நிலையான அபிவிருத்தியின் முதன்மை இலக்குகளை அடைவதற்குச் சாத்தியமான சகல செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு மதுவரி ஆணையாளர் நாயகம் அடங்கலாக சகல அலுவலர்களும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றனர்.

5.2 இனங்காணப்பட்ட நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

- நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு 2023 இன் செயற் திட்டத்திற்கு அவ்விலக்குகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது.
- 2023 இற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள் மற்றும் செயற்பாடுகள் வருமாறு.

இலக்குகள்	குறிக்கோள்கள்	அடைவுக் குறிகாட்டி	இது வரை எய்தப்பெறுகையின் முன்னேற்றம்		
			0% -49%	50% -70%	75%-100%
இலக்கு - 01 சகல இடத்திலும் சகல முறையிலும் வறுமையை ஒழித்தல்	➢ வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் குறிப்பிட்ட வரி சேகரித்தலின் ஊடாக நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்குதல், பொருளாதார, சமூக அபிவிருத்திக்கும் உட்கட்டமைப்பு வசதி விருத்திக்கும் அவ்வரியை பொதுத் திறைசேரிக்கு உரிய காலத்தில் வரவு வைத்தல்.				✓
	➢ சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் அபாயகரமான அவுடதங்களை வினைத்திறன் மிக்க முறையில் சட்ட வலுப்படுத்தலின் ஊடாக சமூகப் பாதுகாப்பை மேம்படுத்தல் மற்றும் வறுமையை ஒழித்தல்.				✓
	➢ ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிராமங்களைத் தெரிவு செய்து மதுபானங்கள் மற்றும் அபாயகர அவுடதங்கள் பாவனை மற்றும் விளைவுகள் பற்றி தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துதல்.		✓		
	➢ மதுபானம் மற்றும் சிகரட் உற்பத்திகளைக் கொள்வனவு செய்தலில் ஆர்வமின்மையை ஏற்படுத்தும் பொருட்டு வருடாந்த வரியை அதிகரித்தல் அல்லது விலையை அதிகரித்தலின் ஊடாக கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.				✓
	➢ 2022.02.31 ஆம் திகதிய 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம், பீடி உற்பத்திக்கு புதிய வரியொன்றை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அதன் ஊடாக பீடிக் கொள்வனவை ஊக்குவிக்காமை மற்றும் கிடைக்கப் பெறும் வருமானத்தை அரசிறை வருமானத்தில் வரவு வைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குதல்				✓
	➢ மதுபானம், புகையிலை நுகர்வு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக மதுபான, புகையிலை நுகர்வை குறைத்தல் அல்லது குறைக்க நடவடிக்கை எடுத்தல்			✓	

இலக்கு - 03 எல்லோருக்கும் ஆரோக்கியமான வாழ்வைப் பேணுதல், சகல வயதினருக்கும் நல்வாழ்வை மேம்படுத்தல	➢ சட்டரீதியாக உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு இலங்கைத் தரநிர்ணய நிறுவகத்துடன் இணைந்து சகல மதுபானங்களுக்கும் தரங்களைத் தயாரித்தல்				✓
	➢ சுகாதார, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு சட்ட விரோத மதுபான, புகையிலை உற்பத்தியைக் குறைத்தல் மற்றும் கட்டுப்படுத்தல்				✓
	➢ பயனுள்ள தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்தல்				✓
	➢ பொதுமக்களின் நல்வாழ்வு பொருட்டு சட்ட விரோத மதுபானங்கள், போதைப்பொருட்கள் தொடர்பில் சட்டவலுப்படுத்துதல்				✓
	➢ 21 வயதிலும் குறைந்த பிரிவினருக்கு மதுபான, புகையிலை உற்பத்திகளின் விற்பனையை கட்டுப்படுத்துதல்				✓
	➢ 2023 இல் சட்ட விரோத கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உரிய தரங்களை பனை, தென்னை, கித்துளின் பொருட்டு தயாரித்தல்			✓	
	➢ மனித உயிர்கள் மதுப்பழக்கத்தால் நெருக்கடிக்குள்ளாவதைத் தடுப்பதற்கு சகல மட்டத்திலுள்ள பிரஜைகளுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்				✓
	➢ பொதுமக்களின் சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கும் சூழல் மாசுபடலைத் தவிர்க்கும் பொருட்டு மதுபானம் பாவித்தபின் வீசும் போத்தல்கள், கான்களை சேகரித்து மீள் சுழற்சி செய்யும் பொருட்டு மதுவிற்பனை நிலையங்களில் கூடைகளைப் பொருத்துதல்				✓

இலக்கு - 12 நிலையான உற்பத்தி மற்றும் நுகர்வு முறைகளைப் பாதுகாத்தல்.	➢ மதுபானங்கள், புகையிலை நுகர்வைக் கட்டுப்படுத்தலுக்கு பொதுமக்களிற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தல்.			✓	
	➢ சட்ட விரோத மதுபானங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு வருடாந்த தனிமனித மதுபான நுகர்வைக் கணக்கெடுத்தல் மற்றும் அதற்கிணங்க தனிநபர் மதுபான நுகர்வைக் கட்டுப்படுத்தல்.				✓
	➢ வரி நிர்வகித்தலை வசதிப்படுத்தல், சந்தைக்கு பதிலீடுகள் வருதலைக் கட்டுப்படுத்தல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பான மதுபானம் என்பன பொருட்டு பாதுகாப்பு ஸ்ரிக்கரை அறிமுகஞ் செய்தல்.				✓
	➢ தரத்தில் உயர்ந்த மதுபானம். புகையிலைகளை சான்றுப்படுத்தல் பொருட்டு மதுபான உற்பத்திச்சாலைகள், புகையிலை தொடர்பான உற்பத்திச்சாலைகளை வினைத்திறனுடன் மேற்பார்வை செய்தல்			✓	
	➢ சகல மதுபான உற்பத்திச்சாலைகளுக்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பாதுகாப்பு சான்றிதழ் மற்றும் நீரின் தூய்மை பற்றிய(பொயிலர்) சான்றிதழ் என்பன வழங்குதற்கு நடவடிக்கை எடுத்தல்.				✓

இலக்கு - 16 நிலையான அபிவிருத்தி பொருட்டு அமைதியான, அனைத்தையும் உள்ளடக்கிய சமுகங்களை மேம்படுத்தல் மற்றும் அனைத்து மட்டங்களிலும் பயனுறுதி மிக்க, பொறுப்பு வாய்ந்த, அனைத்தையும் உள்ளடக்கிய நிறுவனங்களை கட்டியெழுப்புதல்	➢ அபாயகரமான அவுடதங்கள், சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி தொடர்பில் பயன்மிக்க சட்ட அமுலாக்கலின் ஊடாக மக்களுக்கு அமைதியான சுற்றுச்சூழலைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தல்.				✓
	➢ சகல அலுவலர்களுக்கும் சட்டத்திற்கமைய கடமைகளை மேற்கொள்ளத் தேவையான தெளிவுபடுத்தல் மற்றும் பயிற்சியை வழங்கல்.				✓
	➢ சகல அலுவலர்களும் பொறுப்புடன் நடவடிக்கை மேற்கொள்ள தேவையான சூழலை ஏற்படுத்தல்.				✓
	➢ சட்டப் பிரிவினை செயற்படுத்துவதன் ஊடாக சட்டரீதியான சூழலில் கடமையை மேற்கொள்ள பொருத்தமான சுற்றுச்சூழலை ஏற்படுத்தல்.				✓
	➢ சகல அலுவலர்களுக்கும் ஆகக்குறைந்தது ஒரு அலுவலருக்கு 12 மணித்தியாலம் அல்லது நிறுவனம்சார் அல்லது வெளியகப் பயிற்சியை வழங்குதல்.			✓	
	➢ பெண் அலுவலர்களுக்கு பதவியுயர்விற்கு சம வாய்ப்பை வழங்கல் மற்றும் ஆண், பெண் இருபாலாருக்கும் நியாயமான சம்பளத்தை பெறுதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதன் மூலம் ஆண், பெண் வேறுபாட்டைக் கவனத்திற் கொள்ளாமை.			✓	
	➢ சட்டரீதியாக உற்பத்தி செய்யப்படும் மதுபான, புகையிலைக் கைத்தொழிலிலிருந்து பெறும் வருமானத்தை தொடர்ச்சியாக விருத்தி செய்யும் பொருட்டும் பொருளாதார அபிவிருத்தி பொருட்டும் வினைத்திறனுடன் நடவடிக்கை மேற்கொள்ளலின் ஊடாக வினைத்திறன் மிக்க வேலைவாய்ப்பை உறுதி செய்தல்				✓

இலக்கு - 17 நிலையான அபிவிருத்தி பொருட்டு உலகளாவிய ஒத்துழைப்பைச் செயற்படுத்தலின் தேவையை வலுப்படுத்தல் மற்றும் புனர்வாழ்வு பெறுதல்	➢ வருடாந்தம் சேகரிக்கும் மதுபான, புகையிலை வரி வருமானத்தை பொதுத் திறைசேரிக்கு முறைப்படி வழங்குதல் மற்றும் பாதுகாத்தல் ➢ புதிய தொழில்நுட்பத்தை இனங்காணலின் ஊடாக வருமானம் சேகரிக்கும் செயன்முறையை வினைத்திறன் மிக்கதாக்கும் பொருட்டு ERMS மற்றும் RASED முறைகளை அறிமுகஞ் செய்தல் ➢ உலகளவில் பிரசித்தமான பாதுகாப்பு ஏற்பாடான Fool Proof Sticker அல்லது digital printing இனைப் பயன்படுத்தி மதுவரி வருமானத்தைப் பாதுகாத்தல்.				✓ ✓ ✓

அத்தியாயம் - 06

மனிதவள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

6.2 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயலாற்றுகையை மனிதவளத்தில் ஏற்படும் குறை அல்லது மிகை பாதிக்கும் முறை

6.3 வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள்

6.4 மனித வள அபிவிருத்தி


6.4.1. நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிக்கும் முறை


6.4.2. மனித வள அபிவிருத்தி – பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	2023.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு		
	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதைய பதவியணி	பதவி வெற்றிடம்
சிரேஸ்ட	68	30	39
மூன்றாம் நிலை	381	289	92
இரண்டாம்நிலை	1,048	823	225
ஆரம்பநிலை	142	87	55
மொத்தம்	**1,639**	**1,228**	**411**

6.2 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயலாற்றுகைக்கு மனிதவளத்தில் ஏற்படும் குறை அல்லது மிகை பாதிக்கும் முறை.





சிரேஸ்ட மட்டப் பதவிகளில் காணப்படும் பிரதி 02 மதுவரி ஆணையாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு 2023.08.15 ஆம் திகதி 02 உதவி மதுவரி ஆணையாளர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. மூன்றாம் நிலை பதவி உயர்வுகளாக 21 பிரதான மதுவரிப் பரிசோதகர்களுக்கு 25.02.2023 அன்று பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. சட்ட அலுவலர் பதவியில் நிலவிய வெற்றிடத்திற்கு புதிய அலுவலர் ஒருவர் 15.05.2023 ஆம் திகதி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார். மேலும், உதவி பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) பதவிக்கு 2023.10.30 ஆம் திகதி இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவையின் அலுவலர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார்.

மேலும்,2023 ஆண்டில் மூன்றாம் நிலை பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு 22 மதுவரிப் பரிசோதகர்களை மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் அடிப்படையிலும் 34 மதுவரிப்

பரிசோதகர்களை மதுவரிப் பரிசோதகர் திறந்த ஆட்சேர்ப்பின் அடிப்படையிலும் 08 மதுவரி உத்தியோகத்தர்களை மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிலை பதவிகளை நிரப்புவதற்காக 44 மதுவரி சார்ஜன்ட் பதவிகளில் 30 பதவிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையிலும் 14

பதவிகளுக்க திறமை அடிப்படையிலும் பதவி உயர்வு வழங்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், 100 மதுவரி காவலாளர் பதவிகளை திறந்த ஆட்சேர்ப்பின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், 11 மதுவரி காவலாளர் பதவிகளை மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. 15 மதுவரிக் காவலாளர் சாரதி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தலின் கீழ் புதிய ஆட்சேர்ப்பிற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதுடன் பணிக்கு போதிய அலுவலர் இல்லாமை காரணமாக திணைக்களப் பணிகள் பெருமளவில் தேக்கமடைந்துள்ளன.

அலுவலர் எண்ணிக்கை குறைவடைந்தமை காரணமாக அலுவலர்களுக்கு கண்டுபிடிப்பு இலக்குகளை வழங்கலும் சிரமத்திற்கு உள்ளாக்கப் பட்டுள்ளதுடன் திணைக்களத்தின் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளும் இதனால் நேரடியாகப் பாதிப்படைந்துள்ளன.

மேலும், 2023 இல் திணைக்களம்சார் பதவி வகித்த 119 அலுவலர்களிற்காக 13 வினைத்திறன் தடை காண் பரீட்சைகள் நடத்தப்பட்டன. அத்துடன், நீண்ட காலமாக காணப்பட்ட திணைக்களம்சார் அலுவலர்களின் ஒழுக்காற்று விசாரணைக் கோப்புகளை நிறைவு செய்ய முடிந்ததுடன் 2023 இல் ஒழுக்காற்று விசாரணை நிறைவு பெற்ற கோப்புகளின் எண்ணிக்கை 10 ஆகும்.

6.3 வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள் - 2023

பதவி	வெற்றிடங்களின் எண்ணிக்கை	2023.12.31 ஆம் திகதியன்று நிலைமை	வெற்றிடம் நிலவிய காலம்
மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் (வருமான நடவடிக்கை மற்றும் சட்ட வலுப்படுத்தல்)	1	இப்பதவிக்கு நியமிப்பதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் தகைமை வாய்ந்த ஒருவர் இன்மையால் 2022.12.31 ஆம் திகதி முதல் மதுவரி ஆணையாளர் திரு.கபில குமாரசிங்ஹ இப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.	04 வருடங்கள்
பிரதான நிதி அலுவலர்		பிரதம கணக்காளர் திருமதி ஜி.ஏ.சாந்தனி 2021.12.01 முதல் இப்பதவியில் முழுநேரப் பதில் கடமை பொருட்டு நியமிக்கப்பட்டார்.	02 வருடம் 05 மாதங்கள்
மதுவரி ஆணையாளர் (சமூகப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி)	1	2022.12.31 முதல் பிரதி மதுவரி ஆணையாளர் திரு.பி.எச்.சி. சில்வாவினால் இப்பதவியில் கடமை மேவுகை செய்யப்படுகிறது.	04 வருடங்கள்
மதுவரி ஆணையாளர் (சட்ட வலுப்படுத்தல்)	1	2022.12.31 முதல பிரதி மதுவரி ஆணையாளர் திரு.பி.எச்.சி. சில்வா இப்பதவியில் கடமை மேவுகை பொருட்டு நியமிக்கப்பட்டார்.	01 வருடம்
பிரதி மதுவரி ஆணையாளர் (நிர்வாகம்)	1	2021.10.28 ஆம் திகதி முதல் இப்பதவியில் வெற்றிடம் நிலவுகிறது.	02 வருடம் 02 மாதங்கள்
பிரதி மதுவரி ஆணையாளர் (மனித வளங்கள்)	1	2022.12.31 ஆம் திகதி முதல் உதவி மதுவரி ஆணையாளர் திரு.ஆர்.எஸ்.பி.ஏ.கே. ரத்னாயக்க கடமை மேவுகை பொருட்டு நியமிக்கப்பட்டார்.	05 வருடங்கள்
பிரதி மதுவரி ஆணையாளர் (ஆதரவளிப்பு)	1	2022.12.31 முதல் உதவி மதுவரி ஆணையாளர் திரு.ஆர்.எஸ்.பி.ஏ.கே. ரத்னாயக்க இப்பதவியில் கடமை மேவுகை பொருட்டு நியமிக்கப்பட்டார்.	02 வருடமும் 01 மாதமும்
பிரதி மதுவரி ஆணையாளர் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி)	1	2022.12.31 முதல் உதவி மதுவரி ஆணையாளர் திரு.ஏ.ஏ.அஜித் உபுல் குமார இப்பதவியில் கடமை மேவுகை பொருட்டு நியமிக்கப்பட்டார். 28.12.2023 இல் அவர் ஓய்வு பெற்றதை தொடர்ந்து, 2023.12.28 முதல் பிரதி மதுவரி ஆணையாளர் திரு.கே.தர்மசீலன் இப்பதவியின் கடமை மேவுகை பொருட்டு நியமிக்கப்பட்டார்.	01 வருடம்

பிரதி மதுவரி ஆணையாளர் (சமூகப் பாதுகாப்பு)	1	2021.07.20 முதல் 2022.10.30 வரை பிரதி மதுவரி ஆணையாளர் திரு.பி.எச்.சி.சில்வா இனால் இப்பதவியின் கடமை மேவுகை மேற்கொள்ளப்பட்டது. இப்பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கோ அல்லது பதில் அடிப்படையில் கடமை மேவுகை செய்வதற்கோ எந்தவொரு உத்தியோகத்தரும் நியமிக்கப்படவில்லை.	05 வருடங்கள்
பிரதி மதுவரி ஆணையாளர் (வழங்கல் தொடர் ஒழுங்கமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம்)	1	உதவி மதுவரி ஆணையாளர் திரு.சி.ஜே.ஏ.வீரக்கொடி 2022.12.31 முதல் இப்பதவியின் கடமை மேவுகை மேற்கொள்கிறார்.	03 வருடங்கள் 03 மாதங்கள்
பிரதி மதுவரி ஆணையாளர் (சட்ட வலுப்படுத்தல்)	1	2022.12.31 முதல் உதவி மதுவரி ஆணையாளர் திரு.ஏ.ஏ.அஜித் உபுல் குமார இப்பதவியில் முழுநேர கடமை மேவுகை பொருட்டு நியமிக்கப்பட்டார். 28.12.2023 இல் அவர் ஓய்வு பெற்றதை தொடர்ந்து,உதவி மதுவரி ஆணையாளர் திரு.சி.ஜே.ஏ.வீரக்கொடி இப்பதவியின் கடமை மேவுகை மேற்கொள்கிறார்.	01 வருடம்
பிரதி மதுவரி ஆணையாளர் (வருமான, உரிமம்)	1	உதவி மதுவரி ஆணையாளர் திரு.கே.தர்மசீலன் 2022.12.31 முதல் இப்பதவியில் முழுநேரப் பதில் கடமை பொருட்டு நியமிக்கப்பட்டார்.	01 வருடம்
பிரதி மதுவரி ஆணையாளர் (சட்டம்)	1	2022.12.31 ஆம் திகதி முதல் உதவி மதுவரி ஆணையாளர் திரு.கே.தர்மசீலன் இப்பதவியில் முழுநேரப் பதில் கடமை பொருட்டு நியமிக்கப்பட்டார.	01 வருடம்
உதவி மதுவரி ஆணையாளர்	9	அங்கீகரிக்கப்பட்ட 13 உதவி மதுவரி ஆணையாளர் பதவிகளில் தற்போது 04 உத்தியோகத்தர்கள் காணப்படுவதுடன், அவர்களில் 03 பேர் பிரதி மதுவரி ஆணையாளர் பதவியில் கடமையாற்றுகின்றனர். வெற்றிடமாக உள்ள 10 மதுவரி உதவி ஆணையாளர் பதவிகளுக்கு மதுவரி அத்தியட்சகர்கள் நியமிக்கப்பட்டுள்ளதடன் மேலும் இரண்டு அலுவலர்களாலும் இப்பணிகள் கடமை மேவுகை செய்யப்படுகின்றது.	
மதுவரி அத்தியட்சகர்	18	அங்கீகரிக்கப்பட்ட 31 மதுவரி அதிகாரி பதவிகளில் 13 அதிகாரிகள் மட்டுமே தற்போது பணியாற்றுகின்றனர். எஞ்சிய 18 வெற்றிடங்கள் மற்றும் உதவி மதுவரி ஆணையாளர் பதவி நியமனம் காரணமாக ஏற்படும் 10 வெற்றிடங்கள் என 28 வெற்றிடங்களுக்கு, பதில் மற்றும் கடமை மேவுகை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.	

6.4 மனித வளங்கள் அபிவிருத்தி

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மனித வளங்கள் பிரிவின் நடவடிக்கைகளாக, திணைக்களத்தின் மனிதவளங்களின் அறிவுத் தேர்ச்சி மற்றும் திறன் வளர்ச்சியை மேம்படுத்துதலையும் நிறுவனத்தினதும் தனிநபரினதும் அபிவிருத்தியை மேம்படுத்தலையும் சரியாக ஒழுங்கமைத்தலாகும். இப்பணியை மேற்கொள்ளும் பொருட்டு மனித வளப் பிரிவு மதுவரி ஆணையாளர் ஒருவரினதும் பிரதி மதுவரி ஆணையாளர் ஒருவரினதும் நேரடி மேற்பார்வையின் கீழ் செயற்படுகிறது. மதுவரித் திணைக்களத்தின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளும் பொருட்டு குருணாகலை மாவட்டத்தில் மதுவரிப் பயிற்சிக் கல்லூரி ஒன்று பயன்படுத்தப்படுவதுடன் தலைமை அலுவலகத்தின் கேட்போர் கூடமும் வெளியக நிறுவனங்களிலுள்ள நிலையங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

2023 இற்காகத் தயாரிக்கப்பட்ட செயற் திட்டத்தின் பிரகாரம் சகல சீருடை அலுவலர்கள், நாடளாவிய சேவை மற்றும் இணைந்த சேவை அலுவலர்களிற்கு ஆகக்குறைந்தது ஒரு அலுவலருக்கு 12 மணித்தியாலப் பயிற்சியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டில், சகல சீருடை ஊழியர்களுக்கும் சட்டம் மற்றும் திணைக்களத்தின் ஆவணங்கள் மற்றும் பொது நிர்வாக சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் பற்றிய முழு புரிதலும் அறிவும் வழங்கப்பட்டது. இத்திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்களுக்கு அரச நிதி தொடர்பான விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலும், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் சீருடைப் பணியாட்டொகுதியினர் ஆகியோருக்கு வெளி நிறுவனங்களின் மூலம் விசேட பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.18/2020 இன் பிரகாரம் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் தமிழ் மொழியைக் கற்பதன் ஊடாக தமது மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்வதற்காக ஆறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

மற்றும் புகையிலை மற்றும் மதுபான அதிகார சபையின் சட்ட விதிமுறைகள் தொடர்பான செயலமர்வுகள் நடத்தப்பட்டன, மேலும் தேசிய பயிலுநர் சபையின் கார்கள் தொடர்பாக சாரதிகளுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்கும் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்தது.

மதுவரித் திணைக்களத்தின் மனித வளங்களைப் பலப்படுத்தி விருத்தி செய்வதன் மூலம் இலக்குகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய அலுவலர்களைக் கொண்ட அலுவலர்கள் குழாம் ஒன்றை உருவாக்குதல் மற்றும் அதற்கு மேலதிகமாக, வெளிச்சமூகத்தில் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனை தொடர்பில் இளைஞர், பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்காக போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கமைய, 2023 ஆம் ஆண்டில், மனிதவள பிரிவு 27 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளதுடன், ரூபா 4,134,330.00 செலவழித்து அனைத்து நடவடிக்கைகளையும் முகாமைத்துவம் செய்துள்ளது.

கோவிட் 19 தொற்றுநோய், நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடிகள் என்பன காரணமாக ஏற்பட்ட ஒதுக்கீடுகளின் மட்டுப்படுத்தலினால் பயிற்சிகன் பெருமளவில் தடைப்பட்டன. குறித்த இடைவெளியை நிரப்புவதன் மூலம் 2023 ஆம் ஆண்டில் பயிற்சி நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்ள முடிந்தது. நாட்டில் மோசமடைந்து வரும் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியின் விளைவாக, ஏற்பாடுகளில் கடமையான கட்டுப்பாடுகள் காரணமாக திட்டமிடப்பட்ட பல பயிற்சி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிரமங்கள் இருந்தபோதிலும் வெற்றிகரமான இலக்குகளை நோக்கி நகர முடிந்தது

2023 இல் மனித வளப் பிரிவின் நேரடித் தலையீட்டின் கீழ் 27 பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் அதில் 2746 அலுவலர்கள் பங்குபற்றியிருந்தனர். அவர்களுக்கு சான்றிதழும் வழங்கப்பட்டது. இந்த அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் மதுவரி ஆணையாளர் ஒருவரினதும் பிரதி மதுவரி ஆணையாளர் ஒருவரினதும் மற்றும் பிரதான மதுவரி பரிசோதகர், மதுவரி கோப்ரல், ஒரு அலுவலக அதிகாரி மற்றும் மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் ஆகியோரின் நேரடி மேற்பார்வையின் கீழ் நடத்தப்படுகின்றன என்பது ஒரு குறிப்பிட்ட உண்மை. மனிதவளப் பிரிவால் நடத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

6.4.1 நிறுவனத்தின் செயலாற்றுகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிக்கும் முறை

ஏதேனும் நிறுவனம் ஒன்றின் முக்கிய வளமாக இனங்காணப்படுவது மனித வளமாகும். அந்த நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதற்கு மனித வளப் பிரிவு பொறுப்பாகவுள்ளது. நிறுவன நோக்கங்களைப் போன்றே பணியாளர் அபிலாசைகளையும் நிறைவேற்றும் பொருட்டு பணியாளர் பயிற்சி மற்றும் பணியாளர் மேம்பாடு என்பன அத்தியாவசிய மானவையாகக் கருதப்படுகிறது. பணியாளரின் வினைத்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கு பணியாளரின் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதை பணியாளர் பயிற்சியின் ஊடாக எதிர்பார்க்கப்படுவதுடன், பணியாளரின் எதிர்கால செயல்திறன் வளர்ச்சிக்கு பணியாளரின் பொது இயலுமை விருத்தியின் மூலமாக எதிர்பார்க்கப்படுகிறது. இதன் ஊடாக அறிவுத் தேர்ச்சி, எண்ணக்கரு இற்றைப்படுத்தப்படல், பணியாளர் செயலாற்றுகை மற்றும் பணியாளர் வெளியீட்டைக் குறைத்தல், வேலைத் திருப்தியை உயர்த்துதல், பதவியுயர்விற்கான சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தல் ஆகிய பிரதி இலாபங்களை பயிற்சி மற்றும் விருத்தியின் மூலம் ஏற்படுத்தலாம். 2023 இல் மனித வளப் பிரிவின் நேரடித் தலையீட்டின் கீழ் 27 பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் அதில் 2746 அலுவலர்கள் பங்குபற்றியிருந்தனர். அவர்களுக்கு சான்றிதழும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக, சமூக சேவையாக இளைஞர் யுவதிகளை போதைப்பொருள் மற்றும் முரண்பாடான சூழ்நிலைகளிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு பாடசாலைகள், இளைஞர் நிலையங்கள், மதுபான உற்பத்தி தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில் சுமார் 20 போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் இலவசமாக நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக அரசாங்க ஒதுக்கீடுகள் இல்லாத போதிலும், மதுவரித் திணைக்களம் தனது சொந்த வளங்களுடன் இந்த முயற்சிகளை முன்னெடுத்துள்ளமை பாராட்டத்தக்கது. மேலும், மனித வளங்கள் பிரிவானது திணைக்களத்திற்குள்ளும் பகுதியளவு அரச நிறுவனங்களுக்கு வெளியிலும் உள்ள அதிகாரிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது.

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மனிதவளப் பிரிவின் பணியாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகளுடன் மதுவரித் திணைக்களத்தின் மனித வளங்களை விருத்தி செய்வதன் மூலம் நிறுவன மற்றும் தனிநபர் முன்னேற்றத்தை அடையும் நோக்கத்துடன் சரியாக ஒழுங்கமைக்கும் பணியை வழிநடத்துவதற்கு மனிதவளப் பிரிவு பணியாற்றி வருகின்றது

6.4.2 மனித வள அபிவிருத்தி - பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

தொடர் இல.	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்சி வகுப்பு நடைபெற்ற இடம்	பயிற்சி பெற்ற பதவியினர் எண்ணிக்கை	மொத்த முதலீடு (ரூ.)	வெளியீடு/பெற்ற அறிவு
01	உற்பத்திச்சாலைகள், குதங்கள், வடிசாலை பயிற்சி	தலைமை அலுவலகம்	180	ரூ.231,855.00	ம.ஆ, ம.ப, ம.சா.மே, ம.அ, ம.கா - உற்பத்திசாலை ஆவணங்களை பராமரித்தல்.
02	பதவி உயர்வு பெற்ற மதுவரிப் பரிசோதகர் பயிற்சி நெறி.	பனாதரகம	19	ரூ.133,000.00	CEI - நடைமுறை விதிகள், தாபனவிதிக் கோவை, நிதி ஒழுங்குவிதிகள், தலைமைத்துவம்
03	Easy Cash தொடர்பான சட்ட அந்தஸ்து	நிகழ்நிலை	100	-	தற்போதுள்ள சட்ட மற்றும் நிறுவன நிலைமை குறித்து
04	தலைமையகத்தின் இராணுவ அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் (மதுவரிச் சட்டம் தொடர்பாக)	இராணுல தலைமையகம் - அகுருகொட	75	-	போதைப்பொருள் கண்டறிதல் மற்றும் இராணுவ வீரர்களுடன் தொடர்புடைய விதிகள்.
05	நீதிமன்ற கடமை தொடர்பான பயிற்சி திட்டம் - 02 நாட்கள் (வகை - 05)	பனாதரகம மதுவரி பயிற்சி பாடசாலை	218	ரூ.811,730.00	ம.ப, ம.சா.மே கான நீதிமன்ற மாதிரி மூலம் செய்முறை கடமை படிப்பு.
06	தமிழ் மொழித் தேர்ச்சி பற்றிய பயிற்சிநெறி - 150 மணித்தியாலம்	நிகழ்நிலை	200	ரூ.225,000.00	ம.ஆ, ம.சா.மே ம.சா. ம.கா, ம.கா.சா அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் - தமிழ் மொழித் தேர்ச்சிக்காக
07	தமிழ் மொழித் தேர்ச்சி பற்றிய பயிற்சிநெறி - 100 மணித்தியாலம்	நிகழ்நிலை	45	ரூ.75,000.00	அலுவலக உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழித் தேர்ச்சிக்காக
08	சம்பளப்பட்டியல் அறிக்கைகளைத் தயாரித்தல்.	நிபுணத பியாச	02	ரூ.18,000.00	அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் - பொருத்தமான அறிவுக்காக
09	போக்குவரத்து முகாமைத்துவம் குறித்த பயிற்சிப் பட்டறை	நிபுணத பியாச	02	ரூ.12,000.00	அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் - பொருத்தமான அறிவுக்காக
10	பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான அரச நிதி தொடர்பான பயிற்சி - 02 நாட்கள்	நிபுணத பியாச	42	ரூ.197,190.00	பி.ம.ஆ, உ.ம.ஆ, ம.சா உத்தியோத்தர்கள் பொதுக் கணக்குகள், நிதி ஒழுங்குவிதிகள் பெறுகை,
11	அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறி	நிபுணத பியாச	03	ரூ.28,500.00	அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் - உரிய அறிவுக்கு
12	அமைச்சரவை குறிப்பாணை தயாரித்தல்	நிபுணத பியாச	03	ரூ.28,500.00	அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் - உரிய அறிவுக்கு
13	மதுவரி சாரதிகளுக்கான ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் - 02 நாட்கள் அலுவலக உதவியாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சி	ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்		ரூ.718,000.00	மதுவரி சாரதிகள் - போக்குவரத்து மற்றும் நடைமுறை செயல்பாடுகளின் இயந்திர அறிவு.
14	அலுவலக உதவியாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சி	கேட்போர் கூடம்	70	ரூ.193,800.00	அ.உ.சே உத்தியோகத்தர்களுக்கு - அலுவலக வேலை, முக்கிய கடமைகள், ஆவணங்கள் தொடர்பானவை
15	மதுவரி அலுவலர்களுக்கு (பிராந்திய அலுவலகங்கள்) நிகழ்நிலை கணினி பயிற்சி வகுப்பு.	நிகழ்நிலை	100	ரூ.15,000.00	ம.ஆ, ம.ப ம.சா.மே ம.சா. ம.கா, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

16	சட்டம் பற்றிய விரிவுரை (கைது மற்றும் புலனாய்வு தகவல்).	நிகழ்நிலை	100	ரூ.8,400.00	ம.ஆ, ம.ப ம.சா.மே ம.சா. க்காக
17	தலைமை அலுவலகத்தின் சகல நிலை உத்தியோகத்தர்களுக்கும் மன அழுத்த முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	தலைமை அலுவலக கேட்போர் கூடம்	98	ரூ.20,000.00	பணி முகாமைத்துவம், இலக்கு அமைத்தல். புன்னகையுடன் சேவை செய்ய வழிகாட்டுதல்.
18	ப்ரூவரி கைத்தொழில் மற்றும் மதுசார உற்பத்தி தொடர்பான ஒரு நாள் பயிற்சி பட்டறை	லயன் ப்ரூவரி மற்றும் ஐடிஎல் உற்ப தி வளாகம்	720	(லயன் ப்ரூவரி மற்றும் *IDL* உற்பத்திசாலை ஆகியவற்றின் வள பங்களிப்பு)	ம.ஆ, ம.ப ம.சா.மே ம.சா க்கான காய்ச்சும் செயல்முறை, புதிய போக்குகள், மதுசார உற்பத்தி உள்ளிட்ட தொழில்துறை வேதியியல்.
19	அரசாங்க கணக்குகள் மற்றும் பெறுகை தொடர்பான ஒரு நாள் பயிற்சி	நிபுணத பியாச	45	ரூ.117,000.00	உ.ம.ஆ, ம.சா க்கான துறைசார் நிதி விதிமுறைகள்
20	குற்றவியல் நீதியில் குற்றவியல் டிப்ளமோ	இவங்கை மன்றக் கல்லூரி	20	ரூ.621,000.00	ம.சா, ம.ப சா.மே, ம.சா, ம.கா க்கான குற்றவியல் பற்றிய அறிவு
21	மனித உரிமைகள் சட்ட டிப்ளோமா	கொழும்பு பல்கலைக்கழக ம்	04	ரூ.200,000.00	ம.சா, சா.மே, ம.சா .ம.ஆ க்கான மனித உரிமைச் சட்டம் தொடர்பாக
22	தமிழ் அலுவலர்களுக்கான நீதிமன்றக் கடமைகள் பற்றிய பயிற்சிப் பட்டறை. 02 நாட்கள்	தெரிவ செய்யப்பட்ட கேட்போர் கூடம் - திருகோணமலை	30	ரூ.262,280.00	ம.ப, சா.மே, ம.சா, ம.ஆ க்கான நீதிமன்றக் கடமைகள் மற்றும் தொடர்புடைய சட்ட அறிவு
23	உளவளத்துணை பயிற்சி	NATA நிறுவனம்	25	-	போதை நடத்தைகளை அடையாளம் காணுதல் மற்றும் உளவளத்துணை பயிற்சியின் முக்கியத்துவம்.
24	அலுவலக முகாமைத்துவம் மற்றும் அரசாங்க நிர்வாக நியதிகளும் ஒழுங்குவிதிகளும் தொடர்பான பயிற்சிப்பட்டறை	தலைமை அலுவலக கேட்போர் கூடம்	53	ரூ.60,000.00	CEI க்கான பொது நிர்வாக விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பாக
25	போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சி திட்டங்கள்	(பாடசாலைகள், தொழிற்பயிற்சி நிலையங்கள், நிறுவனங்கள்)	(அண்ணளவாக 2000 நபர்கள்)	மனிதவள பிரிவு மூலம் நடாத்தப்படும் தன்னார்வ நிகழ்ச்சித்திட்டங்கள்	போதைப்பொருளுக்கு அடிமையாதல் மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளுடன் தொடர்புடைய அத்தகைய சிறப்பு நடத்தைகளை அடையாளம் காணுதல்.
26	அலுவலக முகாமைத்துவம், ஆவணப் பராமரிப்பு மற்றும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள் பற்றிய பயிற்சிப்பட்டறை (செயலமர்வு - 07)	தலைமை அலுவலக கேட்போர் கூடம்	537	ரூ.98,075.00	ம.சா, சா.மே, ம.சா .ம.ஆ க்கான.- அலுவலக முகாமைத்துவம், கடிதங்கள் மற்றும் ஆவணப் பராமரிப்பு மற்றும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள்
27	திணைக்களத்தில் இயங்குகின்ற கணனி முறைமைகள் மற்றும் தரவுகளை சரியான முறையில் வழங்குவதற்கான முறைமை (RAMIS) தொடர்பான செயல்முறை கணனி பயிற்சிப்பட்டறை.	தலைமை அலுவலக கேட்போர் கூடம்	55	ரூ.60, 000.00	ம.சா, சா.மே, ம.சா .ம.ஆ மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
		மொத்தம்	2746	ரூ.4,134,330.00	
			(போதைப்பொருள் தடுப்பு திட்டங்களில் பங்கேற்றவர்களைத் தவிர.)		

அத்தியாயம் - 07

இணக்கப்பாட்டு அறிக்கை

7.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பங்களிக்கும் முறை பற்றிய இணக்கப்பாட்டு அறிக்கை

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டுநிலை (இணக்கமானது.'. இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதற்கான சிறு விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமற்றமையை தவிர்ப்பதற்கு முன்வைக்கும் தீர்வு நடவடிக்கைகள்
01	**கீழே குறிப்பிட்ட நிதி அறிக்கைகள்/ கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள்	இணக்கமானது		
1.3	வணிக, உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக உற்பத்திக் கணக்குகள்)	ஏற்புடையதன்று.	1. இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று.	
1.4	களஞ்சிய முற்பணக் கணக்குகள்	ஏற்புடையதன்று.	2. இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று.	
1.5	சிறப்பு முற்பணக் கணக்குகள்	ஏற்புடையதன்று.	3. இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று.	
1.6	ஏனையவை	ஏற்புடையதன்று.	4. இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று.	
02	**புத்தகங்கள், பதிவுகளைப் பேணுகை (நி.ஒ.445)**			
2.1	அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல. 267/2018 இன் படி நிலையான் சொத்துகளின் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவேடுகள்/ தனிநபர் ஊதிய அட்டைகள் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.4	உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல	இணக்கமானது		
2.5	சகல மாதாந்த கணக்கு சுருக்கங்கள் (CIGAS) தயாரிக்கப்பட்டு உரிய தினத்தில் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலைகள், காசுக் கட்டளைகள் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		

2.8	இருப்புப் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.9	இழப்புப் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.10	பொறுப்புகள் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.11	அடிக்கட்டைப் புத்தகங்களின் (GAN20) பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
03	**நிதி கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.ஒ. 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணக்கமானது		
3.2	நிதி அதிகார கையளிப்பு பற்றி நிறுவனத்திற்கு தெரியப்படுத்தல்	இணக்கமானது		
3.3	சகல கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதனிலும் கூடிய அலுவலர்களின் ஊடாக இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
3.4	2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் படி சம்பளப் பட்டியல் மென்பொருள் பொதியை பயன்படுத்துகையில் கணக்காளர்களின் நிர்வாகத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தல்	இணக்கமானது		
04	**வருடாந்த திட்டத்தை தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த பெறுகை திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டை தயாரித்து தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களத்திற்கு (டீஇனு) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த நிதிப்பாய்ச்சல் அறிக்கையை உரிய திகதியில் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		

05	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	கணக்காய்வாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட தினத்தில் சகல கணக்காய்வு வினாக்களுக்கும் விடையளித்திருத்தல்	இணக்கமற்றது.	தலைமை அலுவலகம் மற்றும் 133 பிராந்திய அலுவலகங்களைக் கொண்டிருப்பதுடன் அலுவலர் எண்ணிக்கை குறைவு மற்றும் வேலைப்பழு காரணமாக பதிலளிக்கத் தாமதமாகியது.	எதிர்காலத்தில் உரிய திகதியில் பதில் வழங்க நடவடிக்கை எடுக்கின்றேன்.
06	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.ஒ. 134 (2) DMA/1-2019 இன்படி வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்களைத் தயாரித்தல்	இணக்கமானது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்தினுள் பதிலளிக்கப்பட்டது	இணக்கமானது (பிராந்திய அலுவலக கணக்காய்வு ஒரு மாத காலத்திற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்)		
6.3	*2018* ஆம் ஆண்டின் *19* ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் *404(4)* ஆம் உப பிரிவின் பிரகாரம் அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.	இணக்கமானது		
6.4	*134(3)* நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.	இணக்கமானது		
07	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	னுஆயு சுற்றறிக்கை 1-2019 இன் பிரகாரம் குறைந்தபட்சம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் நடைபெற்றது	இணக்கமானது		
08	**சொத்து முகாமைத்துவம்**			
8.1	*01/2017* ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் *07* பந்தியின் பிரகாரம் சொத்து கொள்வனவு மற்றும் அகற்றல் தொடர்பிலான தகவல்கள் கொன்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது	இணக்கமானது		
8.2	மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் *13* ஆம் பந்தியின் பிரகாரம் சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்தவும் அத்தகைய அதிகாரியை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பவும் பொருத்தமான தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுளார்.	இணக்கமானது		

8.3	*05/2016* ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு உரிய அறிக்கைகளானது கணக்காய்வாளர் அதிபதிக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது	இணக்கமானது		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் வெளிப்படுத்தப்பட்ட மேலதிகம் மற்றும் பற்றாக்குறைக்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டது	இணக்கமானது		
8.5	நிஒ. *772* இன் பிரகாரம் பாவனைக்கு உகந்ததற்ற பொருள்கள் அகற்றப்பட்டது	இணக்கமானது		
09	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களிற்கான நாளாந்த வாகன ஓட்ட அறிக்கை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.	இணக்கமானது		
9.2	பயன்பாடற்ற வாகனங்கள் பயன்பாடு நீக்கப்பட்டதன் *6* மாதங்களினுள் அகற்றப்பட்டது.	இணக்கமானது		
9.3	வாகன ஏடுகள் பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது.	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பில் நி.ஒ *103*, *104*, *109* மற்றும் *110* இற்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.	இணக்கமானது		
9.5	*2016.12.29* ஆம் திகதிய *2016/30* ஆம் அரச நிருவாக சுற்றிக்கையின் *3.1* ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வாகன எரிபொருள் பாவனை மீளப் பரீட்சிக்கப்பட்டது.	இணக்கமானது		
9.6	குத்தகை காலம் முடிவடைந்த பின்னர் குத்தகை வாகனங்களின் உரித்து பதிவுப் புத்தகம் மாற்றப்பட்டது	இணக்கமானது		
10	**வங்கிக் கணக்குகளின் முகாமைத்துவம்**			
10.1	வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு, சான்றுபடுத்தப்பட்டு உரியநேரத்தில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.	இணக்கமானது		
10.2	மீளாய்வு ஆண்டு அல்லது முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டன	இணக்கமானது		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்தல், சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்தினுள் அத்தகைய நிலுவைகளைத் தீர்த்தல்	இணக்கமானது		

11	**நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**			
11.1	ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை அதன் வரையறைகள் மீறாது செலவளிக்கப்பட்டது.	இணக்கமானது		
11.2	நி.ஒ. *94(1)* இன் பிரகாரம் ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்.	இணக்கமானது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது		
12.2	கடன்களில் கால ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.	இணக்கமானது		
12.3	ஒருவருடத்திற்கு மேற்பட்ட கடன் மீதிகள் தீர்க்கப்பட்டன.	இணக்கமற்றது	நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	
13	**பொது வைப்பு கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புகள் தொடர்பில் நி.ஒ. *571* இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது.	இணக்கமானது		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது		
14	**கட்டுநிதிக் கணக்கு**			
14.1	வருட முடிவில் காசுப் புத்தகத்தின் மீதி திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது.	இணக்கமானது		
14.2	நி.ஒ. *371* இன் பிரகாரம் வழங்கப்பட்ட தற்செயலான இடைக்கால வழங்கல் பணி முடிவடைந்த பின்னர் ஒரு மாதத்தினுள் தீர்க்கப்பட்டது.	இணக்கமானது		
14.3	நி.ஒ. *371* இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரையறையை விஞ்சாத தற்காலிக இடைக்கால வழங்கல்.	இணக்கமானது		
14.4	மாதந்தம் திறைசேரி புத்தகத்துடன் கட்டுநிதி கணக்கின் மீதி கணக்கிணக்கம் செய்யப்பட்டது.	இணக்கமானது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	ஒழுங்குவிதிகள் பிரகாரம் சேகரிக்கப்பட்ட வருமானத்தை மீளளிப்புச் செய்யப்படல் வேண்டும்.	இணக்கமானது		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காது நேரடியாக வருமான கணக்கில் வரவு வைக்கப்பட்டது.	இணக்கமானது		
15.3	நி.ஒ *176* இன் பிரகாரம் வருமானத்தின் மீதியை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது		

16	**மனிதவள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்.	இணக்கமற்றது	அலுவலர்களின் மரணம், ஓய்வு, பதவி விலகல் போன்ற காரணங்களால் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களை வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் பேண முடியாதுள்ளது.	குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்புக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்
16.2	அனைத்து ஆளணி அங்கத்தவர்களுக்கும் எழுத்து மூலம் கடமை நிரல் வழங்கப்பட்டது.	இணக்கமானது		
16.3	*2017.09.20* ஆம் திகதிய *04/2017* ஆம் ஆளுனு சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு(MSD) சமர்ப்பிக்கப்பட்டது	இணக்கமானது		
17	**பொது மக்களுக்கு தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல் பதிவேடு பராமரிக்கப்படுவதுடன் இற்றைப்படுத்தப்படுகின்றது	இணக்கமானது		
17.2	நிறுவனத்தின் தகவல்கள் பொது மக்களுக்கு வலைத் தளத்தினூடாக அல்லது வேறு ஏதேனும் முறையில் வழங்கப்படுவதுடன் அரச அதிகாரிக்கெதிரான பாராட்டு/ குற்றச்சாட்டினை இந்த வலையத் தளத்தினூடாக அல்லதுவேறு ஏதேனும் முறையில் வழங்க வசதி செய்யப்பட்டுள்ளது	இணக்கமானது		
17.3	சட்டத்தின் *08* மற்றும் *10* ஆம் பிரிவுகளின் பிரகாரம் வருடத்திற்கு இருமுறையான அறிக்கை மற்றும் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கபட்டது.	இணக்கமானது		
18	**பிரஜைகள் பட்டயத்தை அமுல்படுத்தல்**			
18.1	பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் *05/2008* மற்றும் *05/2018(1)* ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனமானது ஓர் பிரஜைகள் சாசனம்/ பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனத்தினை உருவாக்கி அமுல்படுத்தியது.	இணக்கமற்றது	உரிய பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.	தற்போது தயாரிப்பு நடவடிக்கை முடியும் தறுவாயில் உள்ளது.
18.2	சுற்றறிக்கையின் *2.3* ஆம் பந்தியின் பிரகாரம் ஓர் பிரஜைகள் சாசனம்/ பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனத்தினை உருவாக்குவதையும் அமுல்படுத்துவதையும் கண்காணிக்கவும் மதிப்பிடவும் நிறுவனத்தால் ஓர் முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது	இணக்கமற்றது	உரிய பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.	மேற்பார்வை மற்றும் மதிப்பீடு பொருட்டு முறைமையொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

19	**மனிதவள திட்டத்தை தயாரித்தல்**			
19.1	2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 02/2018 இனது இணைப்பு 2 இன் வடிவமைப்பின் பிரகாரம் மனிதவள திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
19.2	மேற்கூறப்பட்ட மனிதவள திட்டத்தில் ஆளனியினரின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஒவ்வொரு வருடமும் *12* மணித்தியாளத்திற்கு குறையாத குறைந்தபட்ச பயிற்சிக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.	இணக்கமானது (உறுதி செய்யப்பட்டுள்ளது)		
19.3	மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கை இணைப்பு 01 இல் காட்டப்பட்ட வடிவில் மொத்த அலுவலர்களிற்கும் வருடாந்த நிறைவேற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.	இணக்கமானது		
19.4	மேற்படி சுற்றறிக்கையின் பந்தி 6.5 இன் படி மனிதவள மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல், திறன் அபிவிருத்தி செயற்படுத்தல் தொடர்பில் ஒரு சிரேஸ்ட அலுவலர் நியமிக்கப்படல்	இணக்கமானது		
20	**கணக்காய்வு பந்திகளிற்கான பொறுப்புக்கூறல்**			
20.1	முந்தைய வருடத்திற்கான கணக்காய்வாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட கணக்காய்வுப் பத்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்	இணக்கமானது.		